Registered at the G. P. O. AS A NEWSPAPER

ஸன்மார்க்கபோதினி

பத்திராவிலைவிதிதம்
ஒருக்கு ரூபா உ-00
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ௫0.
இந்தியாவுக்குசதம் ௫0
பிறதேசங்களுக்கு ௭௫

SANMARKA POTHINI

விளம்பரவிலைவிதிதம்
வரி ஒன்றுக்குச்சதம் 10
40 க்குமேல்ஒருவரிக்கு 8
௨0 க்கு மேல்.......... 9
இணைப்பிரசுர மொவ்வொன்றிற்கும்3-ல் ஒன்று

ஒன்றுவிட்டொரு புதன்கிழமைகளிற்
பிரசுரஞ்செய்யப்படும்

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Published on every
other Wednesday

VOL. XXXIII. JAFFNA APRAL 4th 1917. No 7

௩௩ம் புத்தகம் யாழ்ப்பாணம் ௲௯௱௰௭ம் ௵ சித்திரை ௴ ௪௨ புதன்கிழமை. சங்கியை ௭

UNIVERSITY OF JAFFNA LIBRARY 10 1995

ஓர் வழக்குத் தீர்ப்பு.

நடுவுநிலைமையும் நீதியும் பரோபகாரமுமுடைய நம் தலைவரசின் பெருமை புகழப்படத்தக்கது. அதைச் சில கீழ்வேலைகாரர் சிலசமயங்களில் மங்கச்செய்கிறார்கள். எனினும் தட்டிப்பேச ஆளுண்டானால் அக்குறைவும் மறைவாய்விடுகிறது. இதனைற்றான் நம் அங்கிலோஅரசு மற்றையஅரசுகளிலும் விசேஷமானது. நூறறைக்கெடுத்தது குறுணி என்று சில கல்லறை ஆட்கள் தலையரசுமட்டும் ஓலமிடும்படி செய்துவிடுகிறார்கள். இலங்கைக் கலகத்தில் சிட்சிக்கப்பட்டாருள் பலரை நம் புதியதேசாதிபதியாகிய கருணைவள்ளல் விடுதலைசெய்துவிட்டதைக்குறித்து அவருக்கும்நம்மரசுக்கும்மங்காப்புகழுண்டாயிருக்கிறது. ஆனால் மாண்டவர்களுக்குஅவரென்செய்வார்? அதைக்குறித்தவியாச்சியமொன்றுகண்டிடிஸ்திறிக்கோட்டில் விசாரணை செய்யப்பட்டது. அவ்வியாச்சியம் மெஸ், B.P. வல்கம்பாயாபசனுபகர் என்பவரைப் பொலிசார்பிடித்து வைத்திருந்தபோது அவரது மண்டைபிளந்து மாண்டதால் தனக்குப் பொலிஸ்இன்ஸ்பெக்தர்ஜெனறல் மெஸ், H. L. டௌபிக்கின் அவர்களிடமிருந்து 50 ஆயிரம்ரூபா நட்டஈடு கிடைக்கவேண்டுமென்று மாண்டவரின் மனைவியால் வழக்குஎற்படுத்தப்பட்டது. அவ்வழக்குத் தள்ளப்பட்டது. ஆயினும் தீர்ப்புநீதியாயிருக்கிறது. அதனல் அத்தீர்ப்பின்கருக்கத்தைச் "சுதேசமித்திர"னிற் கண்டபடி இங்குதருகிறோம். அதில் நீதிபதி தீர்ப்புச்சொன்னதாவது:—

இருபகுதிச்சாட்சிகளும் ஒன்றுக்கொன்று மிருவிருத்தியாசமாயிருக்கின்றன. பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனறலின் கீழிருந்த ஒருவரின் அடியினலேயே அவர் இறந்ததில் ஆட்சேபமில்லை. தேசாதிபதிக்குப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அனுப்பிய றிப்போட்டு விரும்பத்தக்கதல்ல. அந்த றிப்போட்டில் லாவிடின் இந்தப் பிரசித்தவழக்கும் எற்பட்டிராதென்பதை நானும்ஒப்புக்கொள்ளுகிறேன். அந்தறிப்போட்டில் 1915ம் ௵ வைகாசிமீ 31௳ காலை மகமதியரின்கடைகள் கொள்ளையிடப்பட்டும் தீமூட்டப்பட்டும் போனதாயும் அத்தருணம் சிலர் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும்போனதாயும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சொல்லியிருக்கிறார். கோட்டில் அது சரியல்லக் குறித்த தெருவில் அவ்வகுப்பார் கொல்லப்படவில்லையென்று வாக்குமூலங் கொடுத்திருக்கிறார். துப்பாக்கிகள் கத்திகள் தரித்திருந்த சிங்களவரிடையே தாமும் தம்மைச்சேர்ந்தவர்களும் புகுந்ததுண்டென்று றிப்போட்டிற்சொல்லி; சிங்களவர் ஆயுதம்வைத்திருந்ததைத் தாம் காணவில்லையென்று கோட்டில் ஒப்புக்கொள்ளுகிறார். றிப்போட்டில் வல்கம்பாயா கையில் கத்தியை எடுத்து விசிக்கொண்டிருந்ததாய்ச்சொல்லி, கோட்டில் அவரை அக்கூட்டத்தினிடையே தாம் காணவில்லையென்றும் அவர்கையில் கத்தியாவது வேறேதாவது இருக்கதாய்த் தாம் நேரிற்காணவில்லையென்றுஞ் சொல்லியிருக்கிறார். இலங்கைதின் அதிகாரிகளுக்குச் சரியான விபரங்களைத்தெரிவிக்க எழுதிய அந்தறிப்போட்டுத் தப்பாயிருப்பதின் காரணந் தெரியவில்லை. சிங்களக் கூட்டத்தாரைக் கைதிசெய்தபோது வல்கம்பாயாவும் கைதிசெய்யப்பட்டு மோட்டார் வண்டிக்குக் கொண்டுபோகப்பட்டார். அப்பொழுது தன்னை என் கைதிசெய்யவேண்டுமென்று தடுக்கவே அவரைப்பொலிசார்பிடித்து இழுத்துத்தள்ளிப்போனர்கள். அத்தருணம் பொலிசார் பொல்லால் முதுகிலும் தோளிலும் அடித்தார்கள். மோட்டாரில் ஏற அவர்ஆட்சேபித்தபோது பஞ்சாப்பிய சோல்சன் ஒருவன் அவருடைய விலாவில் ஈட்டியைவைத்து அழுத்தினன். மற்றொருவன் மண்டையில் துப்பாக்கிச்சோங்காலடித்தான். இப்படியே பொருந்தன்பஞ்செய்தபின் அவர் கையிற் கத்தியை யெடுத்துப் பொலிசாரைத் தாக்கினரென்று காரணஞ்சொல்லப்படினும் அதற்குச் சிறிதும் ஆதாரமில்லை. ஒருபொலிசையாவது அவர் தாக்கவில்லை. அவர்கையில் கத்தி எப்படிவந்ததோ தெரியவில்லை. கத்திஇருந்தால் அதன்கதி என்னவாயிற்று? அதை மேலதிகாரிகளிடம் ஏன் ஒப்புக்கொடுக்கவில்லை? கைதிசெய்வதை ஒருவன் மீறுமுபன்ருல கைதிபாகுவதற்குவேண்டியதைச் செய்யலாமேயொழிய அவனை மரணமடைந்துபோகும்படிசெய்யச் சட்டத்தில்இடமில்லை. அவர் அச்சமயம் தனியேஇருந்தார்; ஆகையால் அவரைஎளிதில்கைதசெய்திருக்கலாம். ஆதலால் சட்டத்தின்படி மண்டையில் அடித்தவன்மீது கொலைக்குற்றம் எற்படும். பஞ்சாபி சோல்சர் அனுவசியகமாகவே மண்டையைப் பிளந்திருக்கிறான். அதனல் சிவில் கிரிமினல் ஆகிய இரண்டிலும் அந்தச்சோல்சரே உத்தரவாதியாகவேண்டும். மண்டையுடைந்தபின் சரியான சிகிச்சை செய்யப்படவில்லையென்ற புகாருக்குச் சிறிது இடமிருக்கிறது. கொலைநடந்து மூன்றுமாசத்துக்குள் வழக்குவற்படவில்லை, ஆதலாலும் சட்டப்படியும் உண்மைப்படியும் பார்த்தால் வழக்காளியின்தடர்ச்சி செல்லாது. ஆகலால் பிரதிவாதி வாதியின் செலவாதியன கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச்செய்கிறேன். இனிமேல் பிரஸ்தாபவழக்குக் கோட்டுக்குப்போமானுல் அப்பொழுது வாதிக்கு நட்டஈடுகொடுக்கநேரிட்டால் 5 ஆயிரம் ரூபா கொடுக்கப்படலாமென்று இப்போதே நான் மதிப்பிடுகிறேன். வாதி தன் புருஷனை இழந்துவிட்டாள். நான்கு குழந்தைகளும் தங்கள் தந்தையை இழந்துவிட்டனர். மரணவிசாரணைநடத்திய கொரூனரும் சரியானபடி விசாரணை செய்யவில்லையென்று தீர்ப்புச்சொன்னர். இவ்விஷயம் பார்லிமெந்துவரையிலெட்டுமென்று நம்புகிறோம்.

பதார்த்தசாரம்.

சவாது.

இதனல் சுரம் தலைவலி தொண்டைக்கம்மல் வாதம் தீரும்.

சவுட்டுப்பு. (வளையலுப்பு)

Sodi Carbonate.

சமுத்திரப்பூண்டுகளின் சாம்பரிலிருந்தாவது சலவைப்பட்டுஞ்சோடாஎன்னும் உப்பை முறித்தாவது உவர்மண்ணி லிருந்தாவது சவுட்டுப்பு எடுக்கப்படும். சுத்திசெய்த சவுட்டுப்பைப் பூநீறு என்பர். மண்ணும் பூநீறும் சேர்ந்திருப்பதே சாரமண்எனனும் உவர்மண். பூநீறில் கார்பனெட்சோடா அதிகமாயுண்டு. இங்கிவர் உவர்மண்ணிலிருந்து பூநீறு எடுக்கிறார்கள். புராதனவைத்தியத்தில் பூநீறு பிரசித்திபெற்றது. வளையல்செய்வதில் இவ்வுப்பு உபயோகப்படுவதால் வளையலுப்பென்றுஞ் சொல்லப்படுகிறது. இதனல் அசீரணம் வயிற்றிரைச்சல் வயிற்றுவலி புளிப்புடனுண்டாகும் வயிற்றெரிவு மூத்திரரோகம் காசம் சிலேட்டுமரோகங்கள் தீரும். கட்டிகளைக்கரைக்கும். அதிகரித்தால் விஷமிக்கும். சருமரோகங்களுக்குக் கழுவுநீராய்ப் பாவிக்கலாம். புளிப்பு அரோசகம் வாந்தி முதலியவைகளைக் கண்டிக்கச் சோடாவை எலுமிச்சம்புளிசேர்த்துக் குடிக்கலாம்.

சவுரிப்பழம். Trichosanthes Palmata.

இதைக் கோரட்டையென்றும் சொல்வர். இது உடம்பிலுள்ளநோயைப் படிப்படியாய்க்குறைத்துத் தேகத்தைச் சுகநிலைக்குக்கொண்டுவரும். சுரநோயும் உஷ்ணத்தடுப்பும் தீர்ப்பினிசமுத்திரம். இதன்பழம் நச்சுத்தன்மையுடையதென்றும் காகங்களைக்கொல்ல வழங்கப்படுகிறதென்றும் ஓர் வைத்தியர் சொன்னர்.

சவ்வரிசி. Sago.

இது ஓர்விதமரச்சோற்றியிலிருந்து செய்யப்படுகிறது. இது போஷணையும் சீரணசக்தியுமுளதாதலால் கஞ்சிகாய்ச்சி நோயாளருக்குக்கொடுக்கப்படுகிறது. அரிசியை இரண்டுமணிநேரம் சலத்தில் ஊறவைத்துப் பிறகு அடுப்பிலேற்றிக் கொதிக்கவைத்துச் சீனியிட்டுக் குடிக்கவும். சாதிக்காய்த்தூளும் சேர்க்கப்படுகிறது. இதனுல் மேகமநீங்கும். பெலமும் தாதுபுஷ்டியுமுண்டாம்.

கையொப்ப வரவு.

G. A. T. Soosaipillai Esq. Pettah Jaffna	2—25
ஸ்ரீ ச. தம்பையா பத்தமேனி விதானையார்	3—00

யாழ்ப்பாணம்.

வர்ச்சிர்—மழையில்லை. காற்றுப் பருவபெயர்ச்சியைச் சமீபித்திருப்பதா லாக்கு வெயர்வை புழுக்கம் அதிகம். அதனல அம்மன் காய்ச்சலாதியரோகங்க ளாங்காங்குண்டு.

சீனிக்கொம்பனி—ஒருமாசத்துள் 180 தொன்வரையிற் சீனியும் 18000 கலன் அல்க்கோ என்னும் சாராயமுஞ் செய்திருக்கின்றனராம். இவர்களின் சாராயத்தைப்பரீட்சித்தவர்கள் மெத்த வியந்துபேசினராம். சீனியென்ற பேர்வைத்தும் கல்லாய் இனியாதபடியால் உறைக்கப் பிடித்துக்கொண்டார்போலே.

பொலிசுநீதிபதி—பங்குனிமீ 27௳முதல் சித்திரைமீ 11௳ வரைக்கும் யாழ்ப்பாணம் மல்லாகம் ஊர்காவற்றுறைப்பொலிசுநீதிபதியாய் அப்புக்காத்து மெஸ், W. D. கைல்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அற்பமுதலுள்ளாரின்சேமம்—அற்பமுதலுள்ளாரும் தம்உழைப்பில் மிச்சம்பிடிக்கும்வகையை அரசினர் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஏழைகள் ஐவைந்துசத முத்திரையாய்வாங்கித் தபாற்கந்தோர்களில்வாக்கும் மாதிரிக்காகிதத்தில் ஒட்டிவைத்து 10 முத்திரை ஒட்டியபின் அதைக்கொடுத்துத் தம்கணக்கில் வைப்பிக்கும்வழியைத் திறந்திருக்கிறார்கள். பலதுளி பெருவெள்ளம் ஆகுமாதலால் ஏழைகளுக்கும் நற்காலம் பிறந்திருக்கிறது.

உத்தியோகஉயர்வு — அநுராசபுரத்தில் மதுபரிபாலன உதவிச் சுப்பிரின்றெண்றராயிருந்த மெஸ். J. S. நீக்கொலாஸ் கண்டிப்பகுதி உதவிச் சுப்பிரின்றெண்றராய் மாற்றப்பட அவரிடத்துக்குப் பருத்தித்துறையிலிருந்த மெஸ். N. S. சாண்டேஸ்அவர்கள் உத்தியோகஉயர்வுடன் நியோகிக்கப்பட்டார்.

மெஸ். சி. விசுவப்பா—வலிகாமம் வடக்குப்பகுதி திஸ்ரூர்மாருளொருவரும் மணியகாரனுமிருந்து காலஞ்சென்ற சின்னப்புமுதலியாரின் 2ம் புத்திரனும் நற்குணநற்செய்கையுடையரும் யாவராலும் நன்குமதிக்கப்பட்டவருமான இவர் சென்ற 22௳ தேகவியோகமானரென்று கேள்வியுற்று மிகத் துக்கித்தோம்.

கிளேரிக்கல்பரீட்சை—இப்பரீட்சைக்கு அனேகர்போயும் 45 பேர் வரையிலேயே அரங்கேறினர். அவருள் மெசேஸ. A. K. ஆள்வாப்பிள்ளை, V. C. அருளானந்தம், D. ஆசைப்பிள்ளை, P. S. கசீமீர், J.A.E. கஸ்பேஷ, P. W. டானியேல், B. யோசேப், V. கார்த்திகேசு, J.M. கதிர்காமர், V. கதிர்காமபிள்ளை, E. A. லோரென்ஸ், V. நடராசா, S. நமசிவாயம், V.P. பொன்னம்பெருமா, T. இராமநாதன், N. P. சலமன், A. N, சவுந்தரநாயகம், T. செல்லப்பா, S. சிவசுவாமிநாதர், A. சிவசுப்பிரமணியம், C. வலலிபுரம் என்பவர்களும் கீழ்த்தரத்தில் N. சபாபதியும் தமிழரென் றெண்ணுகிறோம்.

இலங்கை.

தொற்றுநோயைமறைத்தல்—பாணந்துறையிலுள்ள இருவர் சின்னமுத்துரோகத்தை மறைத்துவைத்ததற்காக ஒருவருக்கு 150 ரூபாயும் மற்றவருக்கு 50 ரூபாயுந் தெண்டமிடப்பட்டது.

கடதாசிச்செய்கை—ஓர் இலங்கைவாலிபன் யப்பானில் கடதாசிசெய்யுந்தொழில்கற்றுவந்து அதை இலங்கையில்நடத்தமுயற்சிக்கிறார். ஓர் கொம்பனியையுண்டாக்கி அதன்மூலமாகவே வேலையைநடப்பிக்க முயலுகிறார். வைக்கோல் கந்தைத்துணி கழித்தபஞ்சு பழங்கயிறு பழங்கடுதாசி மாமரம் கரும்புச்சக்கை வாழைநார்முதலியவைகளிற் செய்யலாமாம். வேலிக்கற்றாழை சதாளி தாழைமுதலியவைகளையும் பரீட்சித்தாலோ? இதற்குஒருலட்சம்ரூபாய் மூலதனம் போதுமாம். இந்நிபுணரை யாழ்ப்பாணத்துக்கும் வரவழைத்தாலோ!

இந்தியா.

வங்காளதேசாதிபதி—வங்காள தேசாதிபதியாயிருந்து பிரசைகளின்நேசத்தைக்கவர்ந்த இவர் அப்பதவியைவிட்டுச்செல்வதால் அப்பகுதி வைத்தியசங்கத்தார் வைத்தியத்தைச் சுதேசபாஷையில் கற்கும்படி வசதிசெய்து கொடுத்ததாகிய பரோபகாரசிந்தைக்காக மனமுருகி வாழ்த்தினர். புதிய தேசாதிபதியான லோட் ரோனல்ஷே இதுவரையில் கல்கத்தாவந்து சேர்ந்திருப்பார்.

அவுரிப்பயிர்—செர்மன் செயற்கை நீலச்சாயவரவுடன் குறைவடைந்திருந்த அவுரிப்பயிர்ச்செய்கை இப்போது மும்முரமாய் நடைபெற்று வருகிறது. பீகார்மாகாணத்திலே அது மிகவிருத்தியாய்வருகிறது. அங்கு பயிர்செய்பவர் பெரும்பாலார் ஐரோப்பியராம்.

யுத்த தந்தி.

Summarised
From the "Ceylonese"
and the Madras "Swadesamitran"

பிரான்சுபெல்சிய செர்மனியயுத்தம்.

19௳ நமதுபடைகளில் சிலபகுதிகள் சத்துருக்களை விடாது பின்தொடர்ந்து முன்னேறியிருக்கின்றன. நமதுசேனைகள் சோமுக்கும் ஸ்லவிக்குமிடையிலுள்ள றெயிற்பாதையில் அநேக இடங்களில் பிரவேசித்துவிட்டன. கைகார்ட்வளர் நம்வசமாயின, மெசிக்குக்கிழக்கில் செர்மனியரின் இரண்டாம் அணியுள்ள ஸ்தலங்களைக் கைப்பற்றினேம், கடந்த சிலதினங்களில் முன்பின் 100 நகரங்களையும் கிராமங்களையும் செர்மனியரிடமிருந்து திரும்பக் கைப்பற்றினேம், அநேக இடங்களைச்செர்மனியர் வெட்கத்தக்குரியவிதமாய்ச் சூறையாடியும் அழித்துவிட்டும் போயினர். செர்மனியரால் பலவந்தமாய்அழைத்துக்கொண்டுபோகப்படாத ஆயிரக்கணக்கானசனங்கள் எங்களை நல்வரவேற்றார்கள் என்று பிரான்சியஅறிக்கை கூறுகிறது.

20௳ செர்மனியர் போர்முனையிலிருந்து வேகமாய்ப் பின்னிடுகிறார்களென்றதற்கடையாளமாய் அவர்கள்நின்றஸ்தலங்கள் நீக்கிளையாக்கப்பட்டுப் புகைகிளம்புவதால் வெளிப்படுகிறதென்று றைற்றர் நிருபர் தெரிவிக்கிறார். கைவிடுமிடங்களை அடியோடுநாசஞ்செய்துவிடுகிறார்கள். காண்டேரில் வயல்களையும் வண்டிகளையும் உபயோகிக்கக்கூடிய சகலசாமான்களையும் அடியோடு நாசமாக்கிவிட்டுப் பின்னடைந்தார்கள். ராணுவசேவகத்திற் குபயோகிக்கக்கூடிய சிறுவரையும் பலவந்தமாயழைத்துப்போகிறார்கள், காண்டேரியிலுள்ள முனிசிப்பல் தலைவரையும் உதவித்தலைவரையும் அழைத்துக்கொண்டுபோகிறார்கள். சன

புகைவண்டிப்பிரயாணம் —பகலில் பின்னேரங்களில காங்கேசன்துறையிலிருந்து செவ்வாய், வியாழம், சனி, ஞாயிறு நாட்களில் புறப்பட்டுக் கொழும்புக்கும் கொழும்பிலிருந்து திங்கள், புதன், வெள்ளி சனிக்கிழமைகளில் புறப்பட்டுக் காங்கேசன்துறைக்கும் பிரயாணஞ்செய்யும்.

னங்களின் பொருட்களைக் கொள்ளையிட்டுப்போவதோடு உதவிக்காய் அமிரிக்காவிலிருந்துவந்த சகாயக்கொம்மிற்றியார் சேகரித்துவைத்த உணவுப்பொருட்களையுங் கைப்பற்றிப்போகிறார்கள். முக்கால்றாத்தல்நிறையுள்ள றொட்டிக்காகச் சனங்களை நாள்முழுதும் வேலைசெய்யும்படி கட்டாயப்படுத்திவந்திருக்கிறார்களென்று ராய்ற்றர்நிருபர்தெரிவிக்கிறார்.

சத்துருக்கள் பலவிருட்சங்களை வேரோடுவெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள். வயல்களைச் சுரங்கக் குண்டுவைத்து நாசமாக்கிவிட்டனர். பாலங்களையுந் தெருக்களையுந் தகர்த்தனர். கிராமங்களுக்குத் தீவைத்துவிட்டனர். ஒதுங்கிடமற்றவர்களைப் பிரான்சியசேனைகள் உணவுகொடுத் தாதரிக்கின்றன.

ஆலோகோட்டுக்கும் மாட்கோமுக்குமிடையில் செர்மனியர் கடூரமயான பீரங்கிப்பிரயோகஞ்செய்து தாக்கினார்கள். நாம் பெருஞ்சேதமுண்டாக்கித் திருப்பியடித்தோம். ஆலோகோட்டில் சத்துருப்படையொன்று 200 யார்தூரமான நம்மரண்களிற்புகுந்து கைகலந்தசண்டைநடந்து ஈற்றில வெருவாய் அரண்களினின்று திருப்பியடிக்கப்பட்டனர். நமதுவிமானங்கள் சத்துருஸ்தானங்களிலும் தொழிற்சாலைகளிலும் சேனைகள்மீதும் வெடிக்குண்டுபோட்டார்கள்.

20உ லூஸ் எப்பிரஸ் ஆகிய இடங்களிலுள்ள நமதரண்கள் சத்துருக்களால் தாக்கப்பட்டன. பிரித்தானிய சேனைகளிற்சிலர் காணாமற்போயினர். நமது ஆகாயப்படைகள் காலாட்படைக்குதவியாயிருந்தது

21உ சோம்நதிக்கரையிலுள்ள நமதுகுதிரைப்படை செயின்குவிண்டினுக்கு எழுமைலுக்கப்பாலுள்ள ரௌபி என்னுமிடம்வரையில் முன்சென்றன.

19உ அராசுக்கும் எயிசனுக்குமிடையிலுள்ள ஸ்தலங்களை விடவேண்டுமென்று வெகுநாட்களின்முன்செய்த ஒழுங்குப்படியே நயங்கிக்கொண்டு நம்மைப் பின்தொடரும் சத்துருக்களால் யாதொரு தொந்தரவுமின்றி நமது ஸ்தலங்களைவிட்டுப் பின்னிட்டோம். நாம் விட்டபகுதிகளில் போக்குவரவு வசதிகளெல்லாம் நாசப்படுத்தப்பட்டன. நம்முடன்கூடப் பின்னிடாமல்நின்ற சனங்களுக்கு 5 நாட்களுக்கு வேண்டிய உணவுப்பொருட்களைமாத்திரம் விட்டுவிட்டுவந்தோம் என்று சம்பிரதியில்லாச் செர்மன் அறிக்கை கூறுகிறது.

22உ விரேக்கினிக்கருகில் பலகிராமங்களைக் கைப்பற்றினோம். நோயனில்செர்மனியர்பின்னிடமுன் 180லட்சம்பிராங்குபெறுமதியான பத்திரங்களைக் கைப்பற்றிக்கொண்டு போய்விட்டார்களென்று பிரான்சியஅறிக்கை கூறுகிறது.

சத்துருக்கள் நம்படைகளை எதிர்ப்பது வரவரப் பலமடைந்துவருகிறது. பனிப்புயலால் நடபடிகள் தாமதமடைகின்றன. நம்படைகளைத் தாக்கின சத்துருப்படைகளைத் திருப்பியடித்தோம். பின்னிடும் செர்மனியர் வாலிபஸ்திரிகளைப் பலவந்தமாய்க் கூட்டங்கூட்டமாய் அழைத்துப்போகின்றனர். பிரான்சரின் ஆயுதசாலையில் வேலைசெய்வதைத் தடுக்கும்படியே அப்படிச்செய்வதாய்ச் செர்மனியர் சொல்லுகிறார்களாம்

பின்னிடும் செர்மனியர் விட்டுச்செல்லும் ஒவ்வொருநகரத்திற்குச் செல்லும்பாதைகளிலும் பிரமாண்டமான குழிகளை உண்டுபண்ணியும் பெரியகிராமங்களைப் பூமிகுட் குண்டுவைத்துச்சிதறடித்தும் தெருவோரங்களில் நின்ற பெரியமரங்களைத் தெருவில்வீழ்த்தியும் வண்டிகள்பிரயாணஞ்செய்யமுடியாமல் செய்துவிட்டார்களாம்

அருசுக்கும் பரோனுக்குமிடையில் சத்துருஅணிகளைக் கோரமாய்த்தாக்கிய பிரதிக்கால் எனும் செர்மன்இளவரசர் திரும்பிவரவில்லையென்று செர்மனியின்செய்தி கூறுகிறது.

25உ பரோனுக்கு 7 மைல கிழக்கேயுள்ள ராய்[illegible] நாம கைப்பற்றினோம். அருசுக்குக்கிழக்கில் சத்துருக்களின் 2ம் அணிஅரண்களையுங்கைப்பற்றினோம். கீயுவில்செயின் காட் என்றஇடத்துக்குக் கிழக்கில் சத்துருஅரண்களில் நட்சேனைபுகுந்து மிகுந்தசேதம்விளைத்தார்கள் என்று பிரித்தானியசெய்தி கூறுகிறது.

24உ செயின்குவிண்டின்கால்வாய்க்குக்கிழக்கில் நம்நிலஸ்தலங்கள்விசாலப்படுத்தப்பட்டன. லாபேரிக்குவடக்கில் சிலஇடங்களில் நாம்முன்சென்றோம். ரீம்ஸுக்குக்கிழக்கிலும் மோர்கோமுக்குமேற்கிலும் முன்னேறமுயற்சித்த சத்துருக்களை நமதுபீரங்கிப்படை திருப்பியடித்தன. செயின்குவண்டினில் யுத்தம் பழையமுறையை யனுசரித்து நடைபெறுகிறது. சென்றவியாழக்கிழமை நமது படை பின்னடையும் செர்மனியரைத்தொடர்ந்து செல்கையில் அவர்கள் திரும்பிவந்து வெகுநேரமாய் யுத்தஞ்செய்தனர். பிரான்சர் உறுதியாய்நின்று செர்மனியரைத் திருப்பியடித்தனர். செயின்குவண்டினில் திறந்தவெளியில் பெருஞ்சண்டைநடைபெறுமென்றும் அதில் அங்கிலேய பிரான்சர்கலந்து சண்டைசெய்வார்களென்றுந்தெரிகிறது.

பின்னடையுஞ் செர்மனியர் சானியில் 1800 கட்டிடங்களுக்குத் தீவைத்துவிட்டார்கள். தேவாலயங்கள் ஆஸ்பத்திரிகள் நியாயஸ்தலங்கள் முதலான பல பொதுக்கட்டிடங்கள் நாசமாயின. 14 வயசுக்குமேல் 60 வயசுக்குட்பட்ட ஆண்களைச் செர்மனியர் பலவந்தமாய்த் தம்முடன் அழைத்துக்கொண்டுபோனார்கள். 13 கிராமங்களிலிருந்து ஸ்திரிகளையும் வயோதிபர்களையும் ஓரிடத்திற்சேர்த்து அவ்விடத்தில் பீரங்கிப்பயிற்சிசெய்தார்களென்றும் அதனால் அனேகர் காயமடைந்தும் கொல்லப்பட்டும்போனார்களென்றுஞ் சொல்லப்படுகிறது. கிணறுகளில் கொடிய நஞ்சைக் கலந்துவிட்டுப் போகிறார்களாம்.

25உ கடந்தஒருவாரத்தில் 300 சதுரமைல்விஸ்தாரமான ஸ்தலங்கள் செர்மனியரிடமிருந்து பிடிக்கப்பட்டது அவ்விடங்களில கிராமங்களும் பட்டணங்களுமாய் 300 இடங்களும் 10 ஆயிரம் குடிசனங்களும் பிரான்சருக்குத் திரும்பக் கிடைத்தது ஐக்கியஅரசுகளின் போர்முனையில் 100 மைல் விஸ்தாரமானபாகத்தில் அரண்களிலிருந்து சேனைகள்சண்டைசெய்வது நின்று திறந்தவெளியில் நின்று சண்டைசெய்யப்படுகிறது ருயி, ஹெறலோன்காடு, லேர்மாண்டு, ராய்சல்ஸ், ஆகியஇடங்களில் செர்மனிய பின்னணி தம்மைப்பின்தொடரும்சேனைகளை உக்கிரமாய் எதிர்க்கின்றன

பாபோமுக்கு 8 மைல் தென்கிழக்கிலுள்ள அட்ராஸ் என்றஇடத்தைப் பிரித்தானிய குதிரைப்படைகள் கைப்பற்றினரென்று றூற்றர்செய்தி கூறுகிறது பிரான்சர் விரைவாய் முன்னேறுகின்றனர் இருபகுதிப்படைகளுக்கும் கடுமையாய் யுத்தம்நடக்கிறது பிரான்சர் லாவோன்பீட்பூமியின் அடிவாரம்வரையிற் சென்றுவிட்டனர்

மியுஸ்நதிக்குமேற்கிலுள்ள சத்துருஅரண்களில் பலவற்றை நாம் கைப்பற்றினோம் இரண்டு சத்துருவிமானங்களைக் கீழேவீழ்த்தினோமென்று பிரான்சியசெய்திகூறுகிறது

பிரான்சிலுள்ள கலே டன்கர்க் நகரங்களைச் செர்மனியவிமானங்கள் வெடிக்குண்டுகளாற்றாக்கின டன்கர்க்கில் பொருட்சேதமாவது உயிர்ச்சேதமாவதுஇல்லை கலேயில் இரண்டு குடியானவர் கொல்லப்பட்டும் ஒருவர் காயப்பட்டும்போயினர்

26உ செர்மனியர் ஒவ்வொருஇடத்தையும் நாசமாக்கிவிட்டுப் பின்சென்றதைக்கண்டு சேனைகள் கோபங்கொண்டு செர்மனியரை வலுவில்சென்றுதாக்கினர் சோம் ஆயிஸ் நதிகளுக்கிடையில் முக்கியமான ஓரிடத்திலிருந்து சத்துருக்களைப் பின்னிடச்செய்தோம் போலம்பிரேவரையில் நம் சேனைகள் முன்னேறினஎன்று பிரான்சியசெய்திகூறுகிறது

25உ லூசுக்குவடக்கில் சத்துரு அரண்களிற்பிரவேசித்துப் பலரைச் சிறைபிடித்துவந்தோம் நமதுவிமானிகள் இரண்டுபிரதானசத்துருரெயில்வேஸ்தேசன்கள்மேற் குண்டுகளபோட்டார்கள் ஆகாயச்சண்டைநடந்து 8 சத்துருவிமானங்கள் சேதமாயின நமது நான்குவிமானங்களைக் காணவில்லையென்று பிரித்தானியசெய்தி கூறுகிறது

26உ பாபோமிலிருந்து காம்பிரேக்குச்செல்லுந் தெருவின்வடபாகத்திலுள்ள லாக்னிக்கோட்டைக்கைப்பற்றி 30 பேரையும் சிறைப்படுத்தினோம் நம்மைநெருக்கிவந்த சத்துருக்களைத் துரத்திவிட்டோம் ஆகாயச்சண்டைநடந்து இருசெர்மன்கப்பல்கள்வீழ்த்தப்பட்டன வேறு 3 சேதப்படுத்தப்பட்டன நமதுவிமானங்களில் 7 காணாமற்போயின

26உ பெல்சியத்தை இரண்டுபாகமாய்ப்பிரித்து ஒருபாகத்துக்குப் பிரசல்ஸ்நகரையும் மற்றப்பாகத்திற்கு நாமூர்நகரையும் தலைநகரங்களாக்கி நிர்வாகவேலைகளைநடத்தச் செர்மனியர் ஏற்பாடுசெய்துவிட்டார்கள்

27உ பைசிக்கிள்வண்டிகளில் பலமான செர்மன்படையொன்று திடீரென்றுவந்து தாக்க[illegible]ராயசல்சுக்குச்சமீபத்தில் முன்னேறிய பிரித்தானியகாவற்படை தோற்று பின்னிடநேர்ந்தது [illegible]ல்லுக்கும் மார்க்கலேக்குமிடையிலுள்ள ரெயில்வேஸ்தேசன் இன்னும் பிரித்தானியர் வசத்திலேயிருக்கிறது

நமதுகுதிரைப்படை சத்துருக்களைப் பின்னிடச்செய்து லாங்காஸ்கஸ்லீராமாண்ட் இகவான்கோட் ஆகியஇடங்களைக் கைப்பற்றின என்று பிரித்தானியசெய்திகூறுகிறது

27உ பிரித்தானிய பிரான்சியர் தற்போது செயின்குவிண்டின்என்றஇடத்தைநோக்கிமுன்னேறமுயற்சிக்கிறார்கள் அந்தஸ்தலம் பரீசுக்கும் பெல்சியத்துக்குமுள்ள வழியிலிருக்கிறது சமீபத்தில் பிரான்சர் எஸ்சினிஎன்ற உயர்ந்தஸ்தலத்தைப் பிடித்துக்கொண்டனர் அவ்விடம் செயின்குவிண்டினுக்கு அடுத்தாப்போலத் தென்பக்கமாயுள்ளது (அது பிரதான ஸ்தலமாதலால்) செர்மனியரும் அதைப்பலமாய்க்காத்துவருகிறார்கள்

பிரான்சில் செர்மனியர் விட்டுச்செல்லுமிடங்களில் காரணமின்றிப் புராதனகட்டிடங்களையும் ஞாபகசின்னங்களையும் வேண்டுமென்றே நூற்றுக்கணக்கான தொன் வெடிமருந்துகளைவியர்த்தமாக்கி நாசப்படுத்திவிட்டார்களாம்

28உ வில்லாபேர்கள் ஷால்கோட் என்ற இருகிராமங்களையும் நமதுகுதிரைப்படை கைப்பற்றிக்கொண்டது என்று பிரித்தானியசெய்தி கூறுகிறது

சென்ற 26உ காலை செர்மனிய டோர்பிடோக்கப்பல்கள் டன்கர்க்என்ற துறைமுகத்துக்கருகில்வந்து 60 குண்டுகளை நகரத்தின்மீது பிரயோகித்தன இருவர்மாண்டனர்

29உ செர்மனியர் புதிதாயமைத்திருக்கும் ஸ்தலங்களில் முக்கியமாய் வடபாகத்தில் பிரித்தானியரைப் பலமாயெதிர்க்கிறார்கள் கியுவில்பேர்சன்வால்என்றஇடத்தைப் பிரித்தானியர்பிடித்ததில் செர்மனியர்க்குமிகுசேதம்

ஆயஸ்நதிக்குத் தெற்கில் சத்துருக்களின் ஆயுதக்கிடங்கொன்றைப் பிடித்தோம் ஆலோகோட்டில் சென்ற 13உ முதல் சத்துருவசதிலிருந்த ஸ்தலங்களை நாம் பிடித்தோமென்று பிரான்சியசெய்திகூறுகிறது

30உ கெய்டிக்கோட்டுக்கருகில் சண்டைசெய்து சொற்லேகிறான் பின்லைஎன்றஇடங்களை அங்கிலேயர் கைப்பற்றினர்

31உ செயின் இன்ஸ் பாலத்துக்குக்கிட்ட முதலாம் ஆணைப்பெல்சியபடை ஊடறுத்துச்சென்று சிலரைச்சிறைப்படுத்தி சத்துருக்களுக்குக் கனசேதத்தைவிளைத்தது.

சப்மரின் கப்பற் கொடுமையும் கப்பற்சேதமும்.

20உ பெல்சியத்தில் கஷ்டமடையும் சனங்களுக்குச் சகாயஞ்செய்ய ஏற்பட்டகொம்மிற்றி செர்மனியரின் சம்மதம்பெற்று அமரிக்காவிலிருந்து உணவுப்பொருட்களையேற்றிவந்த மூன்றுகப்பல்களை செர்மன் சப்மரின்கள் மூழ்கடித்துவிட்டன. 7பேர் கொல்லப்பட்டனர்.

செலின்என்ற ஒல்லாந்துக்கப்பல் தாக்கப்பட்டும் தப்பிக்கொண்டது. அதிலிருந்த மாலுமிகளில் 8பேர் படகுகளில் இறக்கப்பட்டார்கள், செர்மனியர் அப்படகின்மீது குண்டுப்பிரயோகஞ்செய்ய அனைவரும் கொல்லப்பட்டனர்.

டர்க்என்ற சுவேதன்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. கப்பற்றலைவரும் மாலுமிகளும் கரையிலிருந்து 200 மைலுக்கப்பாலுள்ள நடுக்கடலில் விடப்பட்டுப்போயினர். நான்குநாள் பசி குளிரால் வருந்திச் சாகுந்தருவாயில் கரைசேர்ந்தனர்.

கொல்லன்கஷட்என்ற நோர்வேக்கப்பலும்மூழ்கடிக்கப்பட்டது.

விஜிலான்சியா என்றகப்பல் மூழ்கடிக்கப்பட்டது. அதிலிருந்த 7 அமரிக்கருட்பட 15 மாலுமிகள் மூழ்கிஇறந்தனர். அக்கப்பல் அமரிக்கனெனக் கொடியைப் பகிரங்கமாய்க் காட்டிக்கொண்டுசென்றும் கவனியாமல் மூழ்கடிக்கப்பட்டது.

21உ சென்றஒருவாரத்தில் 2538 கப்பல்கள் இங்கிலாந்துக்குவந்தன, 2554 கப்பல்கள்சென்றன 1600 டனுக்கு அதிகமானகப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. குறைந்தவைகளில் 8 கப்பல்கள்மூழ்கடிக்கப்பட்டன. பிரயோசனமின்றிச் செர்மனியரால் தாக்கப்பட்டகப்பல்கள் 19 பாய்க்கப்பலுட்பட மீன்பிடிக்கப்பல்களில் மூழ்கடிக்கப்பட்டன 21 எனப் பிரித்தானிய அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

சத்துரு கடலில் போட்டுவைத்தகுண்டுகளைத் தேடியெடுப்பதில்வேலையாயிருந்த 2 கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டதாய்ப் பிரித்தானிய அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். மூழ்கடிக்கப்பட்ட ஒரு கப்பலிலிருந்தவர்க்குச் சேதமுண்டாகவில்லை. மற்றதிலிருந்த 14 பேர் மூழ்கியிறந்தனர்.

22உ ஹீல்டன்என்ற அமரிக்கக்கப்பல் சென்ற 21உ செர்மன்சப்மரினால் மூழ்கடிக்கப்பட்டது அதிலிருந்து மூன்றுபடகுகளில் மாலுமிகளும் பிரயாணிகளும் இறங்கினர். ஒன்றுபோனஇடம்தெரியவில்லை. 14 பேர் கொல்லப்பட்டனர்.

ஐக்கியஅரசுகள் அமரிக்காவுக்குக் கொடுக்கவேண்டியதொகையை அவைகளுக்கே கடனாய்க்கொடுத்துவிட யோசிக்கப்படுகிறது.

23உ செர்மனி நோர்வேயின் வடபாகக்கடற்கரைக்கும்ஸ்பிட்ஸ் பாகனுக்குமிடையிலுள்ள கடல் அபாயமானதாய்க் கருதவேண்டுமென்று நோர்வேக்குஅறிவித்துக் கடலடைப்பை விசாலித்திருக்கிறது. ஆர்சேஞ்சல்வழியைக் கைப்பற்றவே இவ்வேற்பாடு செய்திருக்கிறதென்று அனுமானிக்கப்படுகிறது.

மூழ்கடிக்கப்பட்ட ஹீல்டன்என்ற அமரிக்கக்கப்பல் மண்ணெண்ணெயேற்றிச் செல்லுங்கப்பல் செர்மனியர் கப்பலின் மத்தியபாகத்தில் குண்டுபிரயோகித்து மூழ்கடித்தார்கள். 6 அமரிக்கராவது மூழ்கியிருக்கவேண்டுமென்று கப்பற்றலைவர் சொல்லுகிறார். உயிர்தப்பிய 13 பேர் கரைசேர்ந்தனர். 21 பேர் மாண்டதாய்ச்சொல்லுகின்றனர்.

19உ மத்தியதரைக்கடலில டான்டன்என்றபிரான்சயுத்தக்கப்பல் இருடோர்பிடோக்குண்டுகளால்தாக்கப்பட்டு அரைமணித்தியாலத்தில் மூழ்கடிக்கப்பட்டது. 806 பேர்காப்பாற்றப்பட்டார்கள். 206 பேர்மாண்டுபோனார்கள்.

பங்குனி௴ 18உ யுடன்முடிந்த ஒருவாரத்தில் 1600 டன்னுக்கு அதிகமான 6 கப்பல்களும் அதற்குக்குறைவான 6 கப்பல்களும் 15 மீன்பிடிக்கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டதாய்ப் பிரான்சிய அரசாட்சி அறிக்கை கூறுகிறது.

26உ பங்குனி௴ 18உ யுடன் முடிந்தவாரத்தில் 2528 கப்பல்கள் பிரித்தானியதுறைமுகங்களுக்குவந்தன 2554 கப்பல்கள் பிரயாணமாயின 1600 டன் நிறைக்கதிகமான 16 பிரித்தானியகப்பல்களும் குறைவுள்ள 8 பிரித்தானியகப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன

27உ அஸ்துரியாஸ்என்னும் பிரித்தானிய ஆஸ்பத்திரிக்கப்பல் 20உசப்மரினால்தாக்கப்பட்டது இராணுவத்தைச்சேர்ந்த 11 பேர் மாண்டனர் ஒரு தாதியுட்பட 8 பேர் காணாமற்போயினர் மாலுமிகளில் 20 பேர் இறந்து 9 பேர்காணாமற்போயினர் 22 பேர் காயப்பட்டனர் அது 900 வியாதியாளரைக் கரையிலிறக்கிவிட்டுத் திரும்புகையில் தாக்கப்பட்டது வைத்தியஉத்தியோகஸ்தரும் அனேகதாதிகளுமிருந்தனர் 300 முதல் 400 பேர்வரைமீட்கப்பட்டனர் கரையிலிறக்கப்பட்டபின் மூவரிறந்தனர் ராணுவ சிகிச்சைப்பகுதியைச்சேர்ந்த அனேகர் காணாமற்போயினர் கப்பற்றலைவரும் வேறு 24 பேருஞ் சரீரங்கள் சென்றவியாழக்கிழமை கரைக்குக்கொண்டுவரப்பட்டன சிலர் மூழ்கியும் சிலர் குளிராலும் இறந்துபோயினர்

26உ இங்கிலீஷ்கால்வாயில் சமீபத்தில் ஒருபிரித்தானிய டிஸ்றோயர் சுரங்கத்திற்பட்டு மூழ்கிவிட்டது 4 உத்தியோகஸ்தரும் 17 ஆட்களும் காக்கப்பட்டனர்

செயின்லூயிஎன்ற ஆயுதந்தரித்த அமரிக்கவியாபாரக்கப்பல் லிவர்பூலுக்குவந்துசேர்ந்துவிட்டது இது செர்மனியரால் வரையறுக்கப்பட்ட கடற்பயமின்றிப் புகுந்துவந்தது ஒரு செர்மன் சப்மரினும் சந்திக்கவில்லையாம் இருபுறத்திலும் 6 இஞ்சுப்பீரங்கிகள் ஏற்றப்பட்டிருந்தன

27உ 1914ம் வருஷத்திலிருந்து பெல்சிய சகாயத்துக்காக வேலைசெய்தகப்பல்களில் 12 செர்மனியரால் மூழ்கடிக்கப்பட்டது

28உ கடந்தவாரம் இங்கிலாந்துக்கு 2314 கப்பல்கள் வந்தன 2433 கப்பல்கள்சென்றன 1600 டன்னுக்குமேலான 18 கப்பல்களும் குறைவான 7 கப்பல்களும் 9 பாய்க்கப்பல்களுட்பட 10 மீன்பிடிக்கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன பிரயோசனமின்றித் தாக்கப்பட்டகப்பல்கள் 13

29உ பங்குனி௴ 25உ முடிந்த வாரத்தில் இத்தாலிக்கு 517 கப்பல்கள் வந்தன. 489 போயின. 2000 டன்னுக்குக் குறைந்த 2 கப்பல்களும் ஒருபாய்க்கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன. வேறொருகப்பல் தாக்கப்பட்டும் தப்பின.

29உ அத்திலாந்திச்சமுத்திரத்தில் அலன்விக்கஸில்என்னும் பிரயாணிகளை ஏற்றியகப்பல் முதல்நாள் ஆழ்த்தப்பட்ட ஓர்கப்பல ஆட்களையும் ஏற்றிவருகையில் எச்சரிப்பின்றி ஆழ்த்தப்பட்டது இருகப்பலிலிருந்தவர்களும் 5 வள்ளங்களிலிறங்கினர் ஒருவள்ளம் 29 பேருடன் ஸ்பானியகரைசேர்ந்தது அதிலிருந்த 8 பேர் இறந்துபோயினர் வேறு மூன்றுவள்ளங்களும் கண்டெடுக்கப்பட்டன ஒன்றில் 27 பேரும் ஒன்றில் 29 பேரும் மற்றொன்றில் 50 பேரும் 5 பிரேதங்களும் இருந்தன மற்றதைக்காணவில்லை

மோவிக்கப்பலின் செய்கை.

மோவிஎன்ற செர்மனிய கொள்ளைக்கப்பலினால் மூழ்கடிக்கப்பட்ட இன்னின்னதென்று பிரித்தானிய கடற்படையதிகாரிகள் 17உ வெளிப்படுத்தியிருக்கின்றனர். அத்துடன் பின்வருங்கப்பல்களையும் மூழ்கடித்திருப்பதாய்த் தெரிகிறது. அவையாவன:— பிரான்ஸ்பிரின்ஸ், எட்டி, பரேச்சாக்ஷயர், ரொடாக்தே, திரின், எஸ்மாரல்டாஸ, ஒடானி, டிமிர்டன், கார்னார்ஜின், செயின்தியடோ என்ற பிரித்தானியகப்பல்களையும் ஸடாட் என்ற நோர்வேக்கப்பலையும்மூழ்கடித்தது, அவைகளின் சில வீமாத்திரப்படவில்லை, மோவிக்கப்பல் 12310 தொன்நிறையுள்ள 22 நீராவிக்கப்பல்களையும் 5 பாய்மரக்கப்பல்களையும் வழிமறித்துப் பிடித்துக்கொண்டிருப்பதாயும் அவற்றில் 8 கப்பல்கள் ஆயுதந்தரித்தவையென்றும் அவைகளிலிருந்து 593 பேர்களை மோவி சிறைபிடித்துப்போயிற்றென்றுஞ் சொல்லப்படுகிறது.

மோவிக்கப்பல் அதலாந்திச்சமுத்திரத்தில்சற்றுப்பிரயாணஞ்செய்துவிட்டு இரண்டாம்முறையாய்ச் செர்மனிக்குப்போய்ச்சேர்ந்திருப்பதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

டோவர்சலசந்திக்குக்கிழக்கே செர்மனிய டிஸ்றோயர்க்கப்பல்கள் பிரித்தானிய டிஸ்றோயர் ஒன்றை மூழ்கடித்ததென்று இந்தியமந்திரி தெரிவித்தார்.

இங்கிலாந்து

19உ இங்கிலாந்தில் கெண்ட் என்றஇடத்தில்சத்துருவிமானங்கள் குண்டுபோட்டதின் சம்பந்தமாய் உத்தியோகமுறையில் வேறுவிபரங்கள் வெளிபடப்படவில்லை. என்றாலும் அங்குநேர்ந்தசேதம்மிகுசொற்பமென்று தெரியவருகிறது

கெண்டில்சத்துரு டிஸ்றோயர்க்கப்பல்கள் 5 நிமிஷந்தான் குண்டுகளைப்பிரயோகித்தன 9 குண்டுகளைப்பிரயோகிக்கப்பட்டன,

சென்றசனிக்கிழமை இரவுதற்காப்பற்ற ராம்ஸ்கேட்நகரில் சத்துருக்கப்பல்கள் குண்டுகளைப்பிரயோகித்துவிட்டுத்திரும்பிச் சீக்கிரத்தில் இருட்டில்போயின. நட்டம் இவ்வளவென்றுசொல்லமுடியாதகாரியம் டோவருக்குக்கிழக்கில் நமது டிஸ்றோயர் கப்பல்களிலொன்றை சத்துருடிஸ்றோயர்க்கப்பல்கள் தாக்கி மூழ்கடித்துவிட்டன நமதுகப்பலும் பதிலுக்குக் குண்டுபிரயோகஞ்செய்தது.அதனமுடிவு தெரியவில்லை 8 பேர்மீண்டுவந்தனர் உத்தியோகஸ்தர் எல்லோரும் மாண்டுபோயினர். உயிர்தப்பினவர்களை ஏற்றமுயற்சித்த ஒரு பிரித்தானிய டிஸ்றோயரும் டோர்பிடோக்குண்டால் தாக்குண்டதாயினும் அதற்கதிகசேதமுண்டாகவில்லை. பிரித்தானிய வியாபாரக்கப்பலொன்றும் கெண்டின் கரையோரத்தில் டோர்பிடோவால் தாக்கப்பட்டுமூழ்கிப்போயிற்று

பங்குனி௴ 31உ வரையில் பிரித்தானிய அரசுக்கு நாளொன்றுக்கு ஏற்படும்செலவு 60 லட்சம் பவுண்என்றும், அத்திகதி வரையில் அரசுக்கு ஏற்பட்டகடன் 39,000 லட்சம் பவுண்என்றும் மெஸ. பொனர்லா தெரிவித்தார்.

20உ இங்கிலாந்தில் உருளைக்கிழங்கின்உற்பத்தி குன்றியிருக்கிறது. இன்னும் மூன்றுமாசங்களுக்கு வேண்டியஅளவு உருளைக்கிழங்குகிடையாதென்று லோர்ட் டிவோன் போட் தெரிவித்தார்.இங்கிலாந்தின் ஏழைச்சனங்களுக்கு முக்கிய உணவிதுவாதலால் தனவந்தர் அதைப்பாவிப்பதை நிறுத்தவேண்டுமென்றும் அவரேதெரிவித்தார்.

22உ இங்கிலாந்தில் 157,323 பேர் தேசசேமத்திற்காய் உழைக்கும் வலண்டியராய்ச்சேர உடன்பட்டனர்.

பலஅளவிலும் 100 கப்பல்களுக்கு அதிகமாய்ச்செய்ய ஏற்பாடுசெய்யப்பட்டது. இங்கிலாந்தில் 15 நாட்களுக்கு அதிகமான சீனியை ஒருவரும் வைத்திருக்கப்படாதென்றசட்டம் உற்பத்தியாயிற்று. வாரத்தில் 2 நாட்களில் உருளைக்கிழங்காவது மாமிசமாவதுசேர்க்காமல் உணவருந்தவேண்டுமென்றும் 5 அவுன்சுக்குமேல் சாப்பிட்டுக்கடைகளில் மாமிசத்துண்டு தயார்செய்யக்கூடாதென்றும் சட்டம்சீக்கிரத்திற்செய்யப்படுமாம்.

22உ ஐயர்லந்துக்குச் சுயராச்சியங்கொடுத்துவிடுவதின்சம்பந்தமாய் திரும்பவும்யோசனைசெய்யப்படுமென்றும் மெஸ.பொனர்லா பார்லிமேந்துச்சபையில் தெரிவித்தார்.

23உ மூன்றரைறாத்தல்றொட்டியின் 1 சிலிங் (முக்கால்ரூபாய்) ஆய்விட்டது. சண்டையில்சேர்ந்த மற்றத்தேசங்களிலிருக்கும் ஏழைச்சனங்கள் உணவுப்பொருட்களால் படுகஷ்டங்களை இங்கிலாந்திலுள்ள ஏழைகள்படவில்லையென்று பார்லிமெந்தில் மெஸ.பாதாஸ்சொன்னார், பலகடைகளில உணவுப்பண்டங்களைவாங்கி விதிகளைமீறி நடப்பதைத்தடுக்க யோசிப்பதாயும் சொன்னார். பணக்காரர் சிலகாலம் உருளைக்கிழங்கை உபயோகியாமல்விட்டால புதுவேளாண்மைவரையில் இப்போதுள்ள கிழங்கு போதுமென்றார். ஆகாரவிஷயத்தில் கடுமையானஉத்தரவு சீக்கிரம் பிறப்பிக்கப்படுமென்றார்,

செர்மனியில் சிறையிருந்தபலர் யுத்தப்பிரதேசத்துக்கு அனுப்பப்பட்டதாய்த் தருமவைத்தியசங்கம் கூறுகிறது.

இந்தியா ஆஸ்திரேலியா தென்னாபிரிக்கா தென்கிழக்குஆபிரிக்கா தென்அமெரிக்கா ஆகிய இடங்களுக்குப்போய் வரும் பிரயாணிக் கப்பல்கள் தங்களுக்குவேண்டுமென்று அரசாட்சியார் உத்தரவுசெய்துவிட்டனர். ஒருதிட்டப்படி பணங்கொடுப்பார்கள். அத்திட்டம் கப்பல்கள்சம்பாதிக்குந்தொகையிற்குறைந்தது. எல்லாப்பிரித்தானிய கப்பலையும் அரசுக்குட்படுத்தி எவ்வளவு பிரயோசனமடையக்கூடுமோ அவ்வளவும்அடையஉத்தேசம்செய்யப்பட்டிருக்கிறது.

23உ ஐயர்லந்துச்சுயஆட்சியின் சம்பந்தமாய் மெஸ.பொனர்லா நேற்றிரவு பார்லிமேந்திற்பேசியபோது என்னவாய்வந்தாலும் மறுபடியும் ஒருமுறை சுயராச்சியவிஷயத்தை முடிவுசெய்யும் நோக்கத்துடன்மறுபடியும்முன்னுக்குவந்திருக்கிறோமென்று அவர்சொன்னவுடனயர்லண்டுக்காரகோஷ்டஞ்செய்தனர். சுயஆட்சித்தலைவரான றெட்மாண்ட் சபையில் சமுகமாயிருக்கவில்லை மற்றோரும் எவ்விதமுடிவு வருகிறதென்றெதிர்நோக்கி மவுனமாயிருந்துவிட்டனர் மெஸ.ரோனல்ட மெக்நீல் என்னும் யூனியனிஸ்ட் கட்சித்தலைவர் அலஸ்டர் கட்சியாரைத்தாக்கிப் பேசினாலும் திரு

த்திரமாய் இவ்விஷயம் முடிவுசெய்யப்படுவதில்தமக்குஞ்சம்மதமென்றுர் ஐயர்லந்தின் சுயஆட்சி அரசட்படவேண்டியதில்லையென்று விலக்கப்படும்மாகாணத்தின் விஸ்தாரத்தைக்குறைத்து அத்துடன்ஒருகுறித்தவருஷம்வரையில் சுயஆட்சிஅரசுக்குட்பட்ட ஸ்தலங்கள்தம்மிஷ்டப்படி ஐயர்லந்துச்சுயஆட்சிப் பார்லிமெந்துக்கோ அல்லது பிரித்தானியபார்லிமெந்துக்கோ பிரதிநிதிகளையனுப்பலாமென வரையறுத்துவிடலாமென யோசிக்கப்பட்டிருக்கிறதாம் ஐயர்லந்துச்சுய ஆட்சிக்கருமத்தில் குடியேற்றநாடுகளின்பிரதிநிதிகள் கவனஞ்செலுத்திவருவது ஊக்கத்தையுண்டாக்கியிருக்கிறது.

இந்தியபிரதிநிதிகளுக்குச்சமபதவி— ஏகாதிபத்தியகான்பரசுக்குப் பிரதிநிதிகளாய் இந்தியாவிலிருந்து வந்திருப்பவர்களுக்கும் குடியேற்ற நாடுகளிலிருந்து வந்திருக்குங்கும் பிரதிநிதிகளைப்போலவே சமத்துவ அந்தஸ்து ஏற்படுமென்று டைம்ஸ் பத்திரிகைகூறுகிறது.

22௳ சேர், எஸ், பி, சின்ஹவுக்கும்சேர்ஜேம்ஸ மெஸ்டனுக்கும் சக்கிரவர்த்திஇன்றுதரிசனைகொடுத்தார்இந்தியாயுத்தஆரம்பத்திலும்யுத்தத்திலும் செய்தபேருதவிகளை அங்கீகரிப்பதற்கடையாளமாய்காண்பரஸ ஆரம்பமானவுடன் இந்தியபிரதிநிதிகளை வரவேற்றதுகுறிப்பிடக்கூடியசிறப்பாயிருந்தது.

27௳ இங்கிலந்தின் வடபாகத்துள்ள ஒரு ஆயுதஉற்பத்திச்சாலையில் தற்செயலாய் இன்றுமாலை ஓர்வெடிவிபத்துண்டாயிற்று பலத்தசேதமொன்றுமேற்படவில்லை ஒருஆள் கொல்லப்பட்டும் 9 பேர்காயப்பட்டும்போயினர் மூன்றுபேருக்குப்பலத்தகாயம்

26௳ ஸ்கொத்திலந்திலும் லோயஸ் டாப்ட் என்றஇடத்திலும் சத்துருக்கள் படையெடுத்துவரப்போகிறார்களென்று சனங்களுள் மனவருட்சியுண்டாயிற்று அதைக்குறித்து ஒருவர்பார்லிமெந்திற்கேட்க அதுதமதுசெவிக்கும் எட்டியதென்றும் அச்செய்தி ஆதாரமற்றவையென்றும் மெஸ பொனர்லசொன்னர்

28௳ இங்கிலந்தில் ஸ்திரிகளும்சம்மதங்கொடுக்கும் சுதந்திரம்பெறவேண்டுமென்று அதை விசாரணைசெய்த கொம்மிற்றியார் சிபாரிசுசெய்ததினால் மெஸ் ஆஸ்குவித் அப்படிக்கொடுக்க வேண்டுமென பார்லிமெந்திற் பேசினர். இவ்விஷயத்தில் போர்முனையிலிருக்கும் யுத்தவீரரின் அபிப்பிராயமுமதேவையென்றும் ஸ்திரிகளின்தொகைக்கேற்றபடி பிரதிநிதிஉரிமையைக்கொடுக்க அரசுதயாராயில்லையென்றும் ஆயினும் பார்லிமெந்தின் தீர்ப்பை அங்கீகரிப்போமென்றும் மெஸ லாயிட் ஜியார்ஜசொன்னர்.

ருசிய இராசாங்கப்புரட்சி.

பங்குனி௴ 4௳ இரவு ருசியசக்கிரவர்த்தி பீட்ரோப் எனுமிடம்வந்துசேர்ந்தார். 15௳ பகல் 2மணிக்கு செனறல் றஸ்கியையழைத்து ருசியாவுக்குப் பொறுப்புபெற்ற அரசாட்சியை நியமித்துக்கொடுக்கத் தாம் உடன்படுவதாய்த்தெரிவித்து அதன் சம்பந்தமான அறிக்கையையும் மேசைமேல் வைத்தாராம் ஒருமணிநேரத்துள் சக்கிரவர்த்திபட்டத்தினின்று விலகிவிடவேண்டுமென்று தந்திவந்துவிட்டது. சிறிதுநேரத்துள் பிரபல சேனைபதிகளிடமிருந்தும் கிராண்டியூக் நிக்கொலாஸிடமிருந்து அம்மாதிரி தந்திகள் கிடைத்தன. ருசியசனங்களின் நன்மைப்பொருட்டுப் பட்டத்தினின்றும் விலகும்படி ஜெனறல் றஸ்கியும் ஆலோசனை சொல்ல அவர் சம்மதித்தார். பீட்டோக்கிராட்டிலிருந்து சில தூதர் இரவு 10 மணிக்குச் சக்கிரவர்த்தியிடம்வந்து விபரங்கூறினர்கள். தமதுசொந்த காவற்படையும் கலகக்காரருடன் சேர்ந்துகொண்டனவென்பதை அறிந்தவுடன் சக்கிரவர்த்தி கலக்கமுற்றுர். உடனே தாம் தமது தம்பியருக்கு இராச்சியத்தை மாற்றிவிடுவதாய்க்கூறி தயார்செய்யப்பட்ட அறிக்கையிற் கையொப்பமிட்டார். பின்பு சக்கிரவர்த்தி வண்டித்தொடரில்தலைமைஸ்தானத்துக்குப் பிரயாணமானர்.

சக்கிரவர்த்திக்கும் சக்கிரவர்த்தினிக்கும் இராசகுடும்பத்தார் முன் புத்திகூறியும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையாம். சக்கிரவர்த்தினிக்குப் புத்திசொல்லும்படிசென்ற கிராண்டியூக் கிறிலின்மனைவிக்குச் சக்கிரவர்த்திகூறிய உத்தரத்தில் இந்த கிராண்டியூக்குகள் எல்லாரும் நமவமிசத் சத்துருக்கள். எங்கள் குலவிரோதிகளாய்ப் பீற்றோக்கிராட்டில் சிலரிருக்கிறார்கள். அவர்கள் கடதாசிவிளையாடிக் காலத்தைக்கழிக்கும் பணக்கொழுப்புள்ள சோம்பேறிகள். நான் 20 வருஷமாய் ருசிய சிங்காசனத்திலிருக்கிறேன். என்சனங்களென்னை நேசிக்கிறார்களென்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும் என்றாராம்.

சக்கிரவர்த்தியையும் சக்கிரவர்த்தினியையும் ரெஸ்புடின்என்பவர்மயக்கித்தம் பேச்சில்கட்டுப்பட்டுநடக்கும்படிசெய்திருந்ததே இராசகுடும்பத்தாருக்கும் சனங்களுக்கும் ஒவ்வாமை நேரிட்ட காரணமாம். பழையமந்திரியார் அவர் மூலமாகவே தாம் விரும்பியகாரியங்களைப் பெறுவதுண்டாம். ராசகுடும்பத்தார்சிலரும் சில ஐசுவரியவான்களும் அவரை எப்படியுங்கொல்ல நிச்சயித்து ஒருவிருந்துக்கழைத்து அவருக்கு மிதமிஞ்சிக் குடிவகையைக்கொடுத்து அவர்வாயாலே அவரது சூழ்ச்சிகளெல்லாம் அறிந்துகொண்டனர். தை௴ வழக்கம்போல் விருந்துக்கழைத்தனர். இடையில் இருவருக்கு ஆபத்துநேரிடுமென்ற எச்சரிப்பு அனுப்பப்பட்டாலும் ஒருஸ்திரி தைரியம்சொன்னதால் புறப்பட்டுப்போனர். இரவில் 2 மணிவரையில் விருந்துநடந்தது. மணிமூன்றுனதும் உமக்குமரணம் நிச்சயம். தற்கொலைசெய்துகொள்ளுகிறீரா அல்லது கொல்லப்படுவது விருப்பமாவென்று ஓர் கைத்துப்பாக்கியைக்கொடுத்தனர். அங்கே கூடியிருந்த ராசகுடும்பத்தினர் ஒருவர்மேல் இவர் சுட்டார்: குறிதப்பிவிட்டது. உடனேஅவரைப்பிடித்துக் கட்டி வேறிடத்திற்குக் கொண்டுபோய்க் கொல்லுமாறு மொட்டார்வண்டியில் அனுப்பிவிட்டனர். அப்படியே அவரைக்கொன்று ஒரு பாலத்தின்மீது போட்டுவிட்டார்களாம்.

கலகங்கிளம்பியவுடன் ஜெனறல் இவனோப் கலகக்காரரையடக்கும்படி புறப்படவேண்டுமென்ற சேனைகளுக்குக் கட்டளையிட்டபோது அவர்கள் கீழ்ப்படியாமல் கலகக்காரருடன் சேர்ந்துகொண்டு மத்தியஸ்தம்பேச இவனோப்பிடம் ஒரு பிரதிநிதியையனுப்பினராம். அப்பிரதிநிதியை இவனோப் கைதிசெய்துகொண்டார். அதனுல் அப்பிரதிநிதி தன்னை இன்னுஞ் சிலமணிநேரத்துள் விடுவியாவிடின் அரண்மனைமுழுதும் கலகக்காரரின் பீரங்கியாற் றுக்கப்படும் என்னவே அவர் விடுதலைசெய்யப்பட்டாராம்.

19௳ புதியஅரசாட்சி பொலிஸபகுதியையும்உளவுபொலிஸபகுதியையும் திருத்தியமைக்க ஏற்பாடுசெய்துவருகிறது. பொலிஸபகுதியில் பழைய அரசாட்சியின்கீழ் வேலைபார்த்தவர்கள் போர்முனைக்கு அனுப்பப்பட்டுவருகிறார்கள். மாஸகோவிலும் பீற்றோகிராற்றிலும் பழைய அரசாட்சிக்குடக்கையாயிருந்த யாவரும் வேலையைவிட்டுவிலகும்படி கட்டாயப்படுத்தப் பட்டனர். பின்லந்தின் சபைப்பிரதிநிதிச்சபையின் அக்கிராசனராயிருந்து பழையஅரசால் சிறையிலடைக்கப்பட்ட மெஸ், ஸவின்கியூவை விடுதலைசெய்து பீற்றோக்கிராற்றுக்கனுப்பும்படி உத்தரவுசெய்துவிட்டனர். பின்லந்துக்குச் சுயஆட்சி கொடுப்பதைப்பற்றியும் புதியஅரசாட்சியார் யோசித்துத் தீர்மானிப்பார்கள்.

புதியஅரசாட்சி பிரசைகளுக்குப் பகிரங்கஅறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அதில பல நூற்றண்டுகளாய் ருசியபிரசைகள் அனுபவிக்கநேர்ந்த கஷ்டநஷ்டங்களைக்குறித்து விபரித்துக் கூறப்பட்டிருப்பதோடு 1905ம்௵ சக்கிரவர்த்தி பிரசைகளுக்குச் சுதந்தரங்களைக்கொடுக்கச் சம்மதித்ததையும் தெரிவித்துத் தற்போதைய யுத்தத்தைச்செயம்பெறமுடிக்க என்னென்ன அவசியமோ அவற்றையெல்லாம் புதிய அரசாட்சி செய்துமுடிக்குமென்று அதில் கூறப்பட்டிருக்கிறது. பின்லந்துக்கு பேரன்ராடீட்கிப் மகா தேசாதிபதியாய் நியமிக்கப்படுவாராம். அவர் நெடுங்காலமாய்ப் பின்லண்டின் சுயாதீனத்தின் பொருட்டுப் பாடுபட்டுவந்தவர். சக்கிரவர்த்தி சீபாநதிக்கரையில் சோகிஸ்லேவ் என்றஇடத்தில் இருக்கிறார். மகன் தன்னைச்சரிப்பைக் கேட்கவில்லையென்று கீப் எனுமிடத்திற்போய் வசித்தயாரும் அவரைப்போய்ப் பார்த்துவந்தார்.

பழையஇராசாங்கத்தில் இராசாங்கக் கலகக்காரரென்று கருதப்பட்டு மறியலிடப்பட்டவரெல்லோரும் புதுராசாங்கத்தாரால் விடப்படுகிறார்கள். புதிய ராசாங்கமந்திரிகளிற் பெரும்பான்மையோர் டூமாச்சபைப்பிரதிநிதிகள்

22௳ ருசியசக்கிரவர்த்தி பீட்டோகிராட்டிலுள்ள ஸார்ஸ்கோஸெலோ என்ற அரண்மனைக்குவந்துவிட்டார். அங்குவருமுதலே புதியஅரசு அவரைச் சிறைப்படுத்தற்காக அனுப்பியபிரதிநிதிகள் மோகிலேவ் என்னும் இடத்திற்போய்ச்சேர்ந்து சக்கிரவர்த்தியின் பிரயாணவண்டித்தொடர் வந்தவுடன் ஜெனறல் அலெக்சீப் சக்கிரவர்த்தியிடஞ்சென்று புதியஅரசின் உத்தரவைக்காண்பித்தார். "என்னை எங்குபோகச்சொன்னாலும்போகிறேன்; புதியஅரசின் தீர்மானத்துக்குப்படத் தயாராயிருக்கிறேன்" என்றார். அவ்விடத்தைவிட்டு வண்டித்தொடர்செல்லுமுன் தாயும் அனேக ஆபீசரும் பிரியாவிடைகூறினர். காலை 9 மணிக்கு வண்டித்தொடர் சுஸ்கிறே என்னுமிடம்வந்துசேரச் சக்கிரவர்த்தி நித்திரையாலெழுப்பப்பட்டார். 10 மணிவரையில் தம்பரிவாரங்களுடன் வண்டியிலேயே காப்பியருந்தி அவரெல்லோரிடமும்பிரியாவிடைகூறி அனுமதிபெற்றுக்கொண்டபின் அவரைச் சிறைப்படுத்தப்படும் அரண்மனைக்கருகிலுள்ள ஸ்டேசனில் வண்டித்தொடர்வந்துநின்றதும் சக்கிரவர்த்தி சாவதானமாய் வண்டியாலிறங்கினர். அவர் சரீரம் தள்ளாடியது உடனே மொட்டாரில் ஏற்றிக்கொண்டுபோகப்பட்டார்.

23௳ நேற்று ருசியாவிலுள்ள பிரித்தானிய பிரான்சிய இத்தாலிய ஸதானபதிகள் பிரதேசகாரியமந்திரி ஆபீசுக்குப்போய் ருசியாவில்புதிதாய் ஏற்பட்ட அரசைத் தாம் ஏற்பதாய்த்தெரிவித்து பிரித்தானிய ஸதானபதி தற்போது தேகசுகவீனமாயிருப்பதால் சுகமானவுடன் அவரையும் மற்றவர்களையுங்கலவரவேற்கவேண்டுமென்றுங் கேட்டார்கள். அத்தருணம் மந்திராலோசனைச்சபைப் பிரதிநிதிகளெல்லோருஞ்சமுகமாயிருப்பாராம்.

செர்மனிசெயித்தால் ருசிய சக்கிரவர்த்தியின் ஆட்சி மறுபடியும் ருசியாவில் நிலைநாட்டப்படும். ஆசலால் சத்துருக்களைச்செயிக்க ருசிய சனங்கள் ஊக்கத்துடன் பாடுபடவேண்டுமென்று இராசாங்கஅறிக்கை வெளியிட்டிருக்கிறது.

ருசிய சிறைச்சாலைக் கைதிகளுக்குக் கசையடி விதித்தலும் விலங்கிடலும் நீக்கப்பட்டிருக்கிறது.

புதியஅரசை அமெரிக்கஅரசம் அங்கீகரித்துவிட்டது.

பழையஅரசு தனிச்சமாதானஞ்செய்ய இருந்ததென்று இப்போது தெரிகிறது.

ருசியாவில் நேர்ந்த கலகத்தால் 2000 பேர் கொல்லப்பட்டுங் காயப்பட்டும் போயினராம்.

புதியஅரசின்யுத்தமந்திரி மெஸ கட்ச்கோப்போர்முனைக்குச்சென்றர் சேனைகள் அவரை நல்வரவேற்றுப் புதியஅரசுக்கடங்கிநடப்பதாய்ப் பிரமாணஞ்செய்தனர்

27௳ ராசவமிசத்தைச்சேர்ந்த சிற்றரசர்களிலும் பிரபுக்களிலும் பிரதானமான 9 பேர் புதியஅரசுக்குக் கட்டுப்பட்டுநடப்பதாய் வாக்குறுதி கொடுத்தனர்

கைதிசெய்யப்பட்ட பழையமந்திரிமாரின் சட்டவிரோதமான செய்கையைக்குறித்து விசாரணை செய்யநியமிக்கப்பட்ட கொம்மிற்றியார் பீட்டோகிருட்டின் பலபாகங்களிலும் 600 யந்திரப்பீரங்கிகள் ஒளித்துவைத்திருக்கக் கண்டுபிடித்தார்கள்

ருசிய கலகத்தாயான மேடம்பிரேஷ்கோவிஸ்கி சிறையினின்று விடுவிக்கப்பட்டு வெளிவரவே ஒடெஸ்ஸநகரவாசிகள் ஆடம்பரத்துடன் நல்வரவேற்றார்கள் அங்குள்ளசேனைபதி அவரைத் தம்மிருப்பிடத்திற்குவிருதுகளுடன் அழைத்துச்சென்றர்

பழைய இராசாங்ககாலத்தில் சனங்களுக்கு விரோதமாய் நடபடிநடத்திய ஜெனறல் இவானோப் பேகரில் கைதிசெய்யப்பட்டார்

28௳ மந்திரிமார்கள் பிரமாணஞ்செய்துகொடுத்தனர் சந்தேகமற்ற வெற்றி பெறும்வரையில் சண்டைநடத்தத் தீர்மானித்தனர் ருசிய பழைய அரசு பிரித்தானியஅரசிடம்வாங்கியகடனைப் புதியஅரசு அங்கீகரித்தது.

கீழ்த்திசையுத்தம்.

22௳ லீடாவுக்கருகில் சத்துருக்கள் பலத்தபீரங்கி [illegible] முன்னேறிவந்து சில உன்னதஸ்தலத்தைப் பிடித்தார்களாயினும் காம்பிருப் எதிர்த்து இழந்தஸ்தலங்களில் ஒருபாகத்தை மீட்டுக்கொண்டோம் புறேறடியில் சத்துருத்தாக்கைத் திருப்பியடித்தோமென்று ருசியசெய்திகூறுகிறது

20௳ ருமேனியபோர்முகத்தில் 23௳ நாம் இழந்த போர்முகத்திற்காய்ச் சண்டைசெய்துவருகிறோம் உஸ்ஸாகிக்குத்தென்மேற்கில் சத்துருக்கள் ஸ்தலங்களில் ஒருபகுதியைப் பிடித்துக்கொண்டார்களென்று ருசியஅறிக்கை கூறுகிறது

29௳ ஸ்டானிஸ்லாவுக்குவடபாகத்திலும் பரிசாறுக்குத்தெற்கிலும் சத்துருக்கள்தாக்கியதைத் திருப்பியடித்தோம் ருமேனியாவில் உசாசர்பிரிவேசநதிகளுக்குத்தென்பாகத்தில் சத்துருக்களை நாம் திருப்பித்தாக்க முயற்சித்தும் பயன்படவில்லை என ருசியசெய்திகூறுகிறது.

அமரிக்காவும் செர்மனியும்.

19௳ சிட்டிஆப் மெம்பிஸ்என்ற அமரிக்கவியாபாரக்கப்பலை சனிக்கிழமைமாலை இரண்டு செர்மன்சப்மரீன்கள் மூழ்கடித்துவிட்டன மாலுமிகளில் 16 பேர்கரைக்குக்கொண்டுபோய்ச்சேர்க்கப்பட்டார்கள் கப்பலில்சாக்கில்லை.

அமரிக்காவுக்குச்சொந்தமான 3 வியாபாரக்கப்பல்களைச் செர்மனியர்மூழ்கடித்திருப்பதால் செர்மனிக்கும்அமரிக்காவுக்கும் சண்டைஏற்பட்டதாகவே கருதுகிறார்கள் பில்டெல்பியாவில் 700 செர்மன்மாலுமிகள் காவலுட்படுத்தப் பட்டிருந்தனர் தற்போதுஅவர்கள் சியோர்சியர் என்னுமிடத்திலுள்ள கோட்டைக்குக் கொண்டுபோகப் படுகிறார்கள்

20௳ புதியயுத்தக்கப்பல்களைக்கட்ட 1150 லட்சம் டலர்செலவிட அமரிக்கபிரசாதிபதி உத்தரவுசெய்தார் 374 புதியஆபீசர்கள் கப்பற்படையிற்சேர்க்கப்பட்டனர் செர்மன்சப்மரீன்களைத் தேடிப்பிடிக்க 200 சிறுசப்மரீன்களைச்செய்ய அமரிக்கஅரசாட்சியார் ஏற்பாடுசெய்தனர்

யுத்தத்தைச்சமாதானமாய்முடிப்பதின்சம்பந்தமாய் மெச்சிக்கோ அரசாட்சியார் அமரிக்க ஐக்கியஅரசாட்சிக்கு அனுப்பியஅறிக்கைக்கு பிரசாதிபதிவில்சன் அனுப்பியபதில்அறிக்கை வாஷிங்டனில்பிரசுரிக்கப்பட்டிருக்கிறது சண்டையிற்கலந்ததேசங்களுக்கும் அமரிக்காவிலிருந்து சாமான் ஏற்றுமதிசெய்வதை அமரிக்கா நிறுத்திவிட்டால் ஐரோப்பாவில் சமாதானம் வலியஏற்படுமென்றும் அதன்பொருட்டு வேண்டியஏற்பாடுகளைச்செய்யும்படியும்மெச்சிக்கோகேட்டிருந்தது. அப்படிச்செய்யமுடியாதென்று பிரசாதிபதிவில்சன் தெரிவித்துவிட்டார்

21௳ அமரிக்காவுக்கும் செர்மனிக்கும் யுத்தம் தொடங்குவதின்சம்பந்தமாய் ஆலோசிப்பதற்காகச் சித்திரை௴ 2௳ அமரிக்க பார்லிமெந்துச்சபைகூடும்படி பிரசாதிபதி உத்தரவுசெய்திருக்கிறார் அமரிக்காவிலுள்ள செம்புவியாபாரிகள் 450 லட்சம்றாத்தல்நிறையுள்ள செம்புப்பொருட்களை அரைவிலைக்கு அமரிக்கஐக்கியமாகாண அரசுக்குக்கொடுத்துதவுவதாய்வாக்களித்திருக்கின்றனர்

25௳ அமரிக்கர்சண்டையிற் பிரவேசித்தால் உள்நாட்டு அமைதியைக் காப்பாற்றுவதற்காக 14 றெசிமென்படைகளைச்சேர்க்க உத்தரவுசெய்யப்பட்டிருக்கின்றன கடற்படைத்தொகையை 62000த்திலிருந்து 87000பேர்களாக்கப்பிரசாதிபதி உத்தரவுசெய்தார் "லேடன்கப்பலை மூழ்கடித்ததினால் பிரசாதிபதிவில்சன் சண்டைக்குப் புறப்படவிரும்பினால் அப்படிச்செய்யப்படும் வேறுவிதமாய் செர்மனியுடன் விவாதஞ்செய்யலாமென்று எண்ணிக்கொள்ளக்கூடியகாலம் கடந்துவிட்டது" என்று கொலோன்கசட் என்றசெர்மன்பத்திரிகை கூறுகிறது.

செர்மனி.

21௳ இங்கிலந்தை விரைவில் தோற்கச்செய்வதின்நிமித்தம் மூனிச்நகரில் செர்மன் சுதேசகொம்மிற்றி ஒன்றுகூடி யோசித்தபோது காவான்பாத்மன்கால்வேக்கை வேலையினின்று நீக்கிவிடும்படி தீர்மானஞ்செய்யப்பட்டதாம்.

25௳ உணவுப்பொருள் விஷயமாய்ச்செர்மனியபார்லிமெந்தில் கடுமையானவிவாதம் நடைபெற்றது. அத்தருணம் யுத்தத்திற்குச் செர்மன்சக்கிரவர்த்தியும் முதன்மந்திரியுமே காரணரென்றும் செர்மனியில சனங்களுக்கு விரோதமாய்நடப்பவர்களை இதன்முன்நடந்த ருசியராசாங்கத்துக்கு ஒப்பிடலாமென்றும் அபேதவாதியான மெஸ். குனர்ட்என்பவர் கண்டித்துப்பேசினர். சமீபத்தில் ருசியாவில்நடந்ததுபோல செர்மனியிலும் நடைபெறுமானல் அதைக்கண்டு தாம் சந்தோஷப்படக்கூடுமென்றுஞ் சொன்னர், உடனே ஒழுங்காய்ப்பேசவேண்டுமென்று சபைத்தலைவர்தெரிவித்தார், அப்பால் சனங்களுக்கு ஆகாரங்குறைவாய்த்தான் கிடைக்கிறதென்றும் தொழிலாளிகள் பசியால் வாடுகிறார்களென்றும் அபேதவாதிகளில் வேறிருவர் சொன்னர்கள். இவ்விதம்பேசியதில் சபையிற்கலக்கமுண்டாயிற்று.

25௳ ராணுவநோக்கத்தையனுசரித்தது மட்டுமல்லாமல் செர்மனியின் பணவன்மையை உலகத்திற்குருசப்படுத்தும்பொருட்டும் யுத்தக்கடனுக்கு யாவரும் பணங்கொடுத்துதவவேண்டுமென்றும், பணம்கிடைக்காவிடில் செர்மனிக்குள் சத்துருக்கள்புகுந்து நாசம்செய்வார்களென்றும் பிரஷியயுத்தமந்திரி சனங்களுக்குத் தெரிவித்திருக்கிறார். அன்வர்பாச்சாவந்து சக்கிரவர்த்தியுடனும் சேனைபதியுடனும் கலந்துபேசுகிறாரென்று பெர்லின்செய்திகூறுகிறதாம்.

செர்மனியின்நிலை ஆபத்துக்கிடமாயிருக்கிறது முக்கிய நகரங்களிலெல்லாம் சனங்களுக்குள் கலகக்குறி தோற்றியிருக்கின்றன. பலஇடங்களில் கலகமாய்க்கிளம்ப முயன்றனர். யுத்தத்தை நிறுத்தவேண்டுமென்று கேட்கப்போவதாகப் பெர்லின்சனங்களும் பயமுறுத்துகிறார்களென்று ஒல்லாந்திலிருந்து செய்திவந்திருப்பினும் உறுதியாய்ச்சொல்வது அசாத்தியமாயிருக்கிறதென்று நோம்தர்தி கூறுகிறது

பால்கன்.

21௳ சென்ற 17௳ பல்கேரியர் விஷக்காற்றுக்குண்டுகளால் மொனஸ்தரைத்தாக்கினர்கள் அதனுல் வயோதிபர் குழந்தைகள் ஸ்திரிகளாக 81 பேர் இறந்தனர் 61 பேர் விஷக்காற்றைச்சுவாசித்துஅதிவருத்தக்கிடக்கிறார்கள்பிழைப்பதுசந்தேகம் சேர்வியாவில்சனங்களைப்பல்கேரியர் நடத்தும்விதத்தைச்சகிக்காமல் சனங்கள் கலகஞ்செய்கிறார்கள்

28௳ செர்வனாஸ்டிஞவில் 26௳ நாம்பிடித்தஅரண்களைத் திரும்பப்பிடிப்பதற்காகச் சத்துருக்கள் பலமாய்த்தாக்கினர் அவர்களின்முன்னேற்றத்தை நமது முட்கம்பிவேலிகள் தடுத்துவிட்டன மொனஸ்றில் சமீபத்தில் சத்துருக்களிடமிருந்து 2104 பேர்களைச் சிறைபிடித்தோமென்று பிரான்சியசெய்திகூறுகிறது

துருக்கி.

19௳ பாக்தாவுக்குத்தெற்கில் பலஸ்தலங்களிலிருந்து துருக்கரைப் பின்னடையும்படி செய்தோம். கேர்மான்சாவுக்குத் தென் மேற்கிலுள்ள ஒருன்பாட் நமதுவசமாய் விட்டதென்று ருசிய அறிக்கைகூறுகிறது.

19௳ துருக்கரைப் பின் தொடர்ந்துசென்ற ருசியர் மோசுல் என்ற இடத்தைக் கைப்பற்றினர். பேர்சியாவின் கானிகுன் என்னுமிடத்தை நோக்கி ருசியர் முன்செல்லுகிறார்கள்.

29௳ (எகிப்தில்) காசாவுக்கு 5 மைல்தெற்கே 15 மைல்தூரம் பிரித்தானியர் முன்சென்று20000 சத்துருச்சேனையுடன் போர்செய்து 53 உத்தியோகஸ்தருட்பட 900 துருக்கரைச் சிறைபிடித்தனர் இருஆஸ்திரியபீரங்கிகளும் 4 ஆஸ்திரிய உத்தியோகஸ்தரும் பிடிபட்டனர்

மெசோப்பொத்தாமியா.

19௳ சனிக்கிழமை நாங்கள் டயலா நதியைக் கடந்து பாஸரிச்சையும் பாகூபாவின் ஓர்பகுதியையும் கைப்பற்றினேம் பாகூபா உணவுப்பொருள் கிடைக்கக்கூடியஇடம் அங்குள்ளவர்கள் நம்முடன் வியாபாரம்நடத்தப் பிரியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். சத்துருக்கள் கார்னிகினை நோக்கிப் பரபரப்புடன் பின்செல்லுகிறார்கள்

27௳ பகடாட்டுக்கு 56 மைலுக்குவடக்கே டியாலாநதியின் இடக்கரையிலுள்ள சரோபானணையில் பிரித்தானியர்முன்சென்று அவ்விடத்தைக் கைப்பற்றினர் பெர்சியாவில் ருசியரால் நெருக்கப்பட்டுப்பின்னிடும்துருக்கசேனைகளை சாங்காரைநோக்கி முன்செல்லும்பிரித்தானியசேனைகள் நெருக்குகின்றன சராபோனில் ஒருபாகத்தைத் துருக்கர் வெள்ளச்சேதத்துட்படுத்திவிட்டு யுனோத்கால்வாயின் பாலத்தையும் தகர்த்துவிட்டுப்போயினர் பிரித்தானியர் 15 மைல்முன்னேறி அபுசிசாலைக்கைப்பற்றினர் கானிகான் ருசியாவசமிருக்கிறது அவ்விடம் பக்டாட்டிலிருந்து 90 மைல் பெர்சிய எல்லைக்கரைக்கு 16 மைலுக்கப்பாலிருக்கிறது பிரித்தானியசேனைகள் கர்கிலுக்கு 33 மைலுக்கப்பாலிருக்கிறது

ஸ்பானியா

29௳ ஸ்பானியா முழுதும் யுத்தசட்டம் பகிரங்கப் படுத்தப் பட்டிருக்கிறது அங்குபலமான இராச்சியக் கலகம் ஏற்பட்டிருப்பதாய்த் தெரிகிறது கப்பல் போக்குவரவு அடியுடன் நின்றுவிட்டது சனத்தலைவர் சிலர் சேர்ந்து பொதுச்சனங்களுக்கு விண்ணப்பஞ் செய்வதாய் பகிரங்க அறிக்கை வெளியிட்டதால் அவர்கள்யாவரும் பிடித்தடைக்கப்பட்டார்கள்

பிரான்சு.

19௳ பிரான்சு அரசாட்சியில மந்திரிமாரெல்லாரும் இராசினாமாக்கொடுத்து வேலையை விட்டுவிட்டார்கள். ஆயினும் யுத்தத்தைக்குறித்தநோக்கம் மாறுபடாது. மெஸ், ரிப்பாட் புதிய மந்திரசபை ஸ்தாபித்துவருகிறார்,

20௳ புதியமந்திரசபை ஸதாபிக்கப்பட்டாயிற்று. மெஸ். ரிப்பாட் பிரதமமந்திரியாய் நியமிக்கப் பட்டார். அவரதுநியமனம் யாவருக்குந் திருத்தியைக்கொடுத்தது.

யுத்தத்தையடுத்த செய்திகள்

ஓர்பத்திராதிபரின்கதி—டெயிலிகிரவ் என்றஒல்லாந்தபத்திரிகையின் அதிபர் ஆஸதிரிய செர்மனியதேசங்களில் மனச்சாட்சியில்லாத அயோக்கியரால்தான் யுத்தமேற்பட்டதென்று 1915 ம௵ தை௴ பிரசுரித்ததற்காக 3 மாசச்சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டார்

26௳ சேனைகளும் உணவுப்பொருட்களும் ஏற்றிச்சென்ற மண்டோரியஸ கப்பல்சுரங்கத்திற்றாக்குண்டுபோயிற்று அக்கப்பல் மாசி௴ 9௳ ஆபிரிக்கதென்கரைமுனையில்தாக்குண்டது அதில்பிரித்தானியபட்டாளமொன்றிருந்தது வெடிவிபத்துண்டானவுடன் கப்பலசிர்ப்பட்டதாயினும் வேகம்குறைந்துபோயிற்று அரைமணிநேரத்துள் உதவிக்கப்பல்கள்வந்து மெனஸபவுன் துறைமுகங்கொண்டுபோய்ச்சேர்த்தன

வர்த்தமானத்திரட்டு.

ஓர்கிரகம் பூமியைத்தாக்குமாம்—மெத்தியூசாலனும்கிரகம் இன்னொருகிரகத்தால் தாக்குண்டு போகும்பாதையை விட்டகன்று சூரியன்பக்கமாய் மணிக்குமணி வேகம்அதிகரித்து ஓடுவதாயும் அது சித்திரை௴ 20௳ பூமியைத் தாக்குமென்றும் அமரிக்க வானசாஸ்திரிகள் கணித்திருக்கிறார்களாம் ஒருவர் பூமியைப்பொடிபடுத்துமென்றும் மற்றவர் மெச்சிக்கோவைத் தாக்குமென்றும் வேறொருவர் பூமியைப்பலமைல்தூரம் தள்ளுமென்றும் பின்னுமொருவர் பூமியின் தினச்சுழற்சியும் உருவமும் பூமி சூரியனைச்சுற்றும்பாதையும் வேறுபடுமென்றும் இன்னுஞ்சிலர் வெவ்வேறபிப்பிராயமுடையராயுமிருக்கிறார்களாம் இவ்விதமே முன்னும்பலசாஸ்திரிகள் பலமுறைகணித்தும் சமர்த்துப்போயினர் கடவுள்கிருபையே நடைபெறும்.

London Watch Co.,
Tiruvadi Tanjore Dt.,
லண்டன் வாட்ச் கம்பெனி,
திருவாதி தஞ்சாவூர் ஜில்லா.

தயவுசெய்து இதைத் தங்கள்சிநேகிதர்களுக்குக்காண்பியுங்கள். இத்தருணத்தை வீண்போக்காமல் எங்கள் கம்பெனியின் உண்மையைப் பரிசோதித்துப் பாருங்கள். அப்போது நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள், எங்கள் வியாபாரம் பிரபலமாகும் பொருட்டு எங்களிடம் உள்ள சாமான்களைக் குறைந்தவிலைக்கு நாணயமுள்ளதாய்விற்று வருகிறோம். இவைகள் ராஸ்கோப் அல்ல வரவழைத்துத் தங்களுக்குத் திருப்தி இல்லாவிட்டால் உடனே பணம் வாபஸ் செய்துவிடுகிறோம். இன்றைக்கே எழுதுங்கள்,

இனாம்! இனாம்!! இனாம்!!!



1 12 அளவிலையுள்ள உயர்ந்த நிக்கல் வெள்ளிச் சங்கிலி இனாம்.

நமது பிரெட்டி கெடியாரம் உலகமெங்கும் பிரக்கியாதியாகும் பொருட்டு லாபத்தைக் கருதாமல் உயர்ந்த சங்கிலி இனாம் கொடுக்க முன்வந்தோம்.

விபரம்.

புதிய பிரெட்டிலீவர்வாட்ச் ஏறக்குறைய ஆறு வருஷகாலம் உழைக்கக்கூடியதும் உறுதியான சாமான்களால் செய்யப்பட்டதும் சிறியகைஸ் அளவுள்ளதும் கெம்புகள் செதுக்கப்பட்டதும் இந்தியன் கவர்ன்மெண்டு குண்டுக்குச்சரியான காலத்தைக் காட்டக்கூடியதும் தவறிக் கீழேவிழுந்தாலும் இதைத் தரித்துக்கொண்டு ஓடினாலும் நிற்காமல் போகக்கூடிய அருமையான லீவர் வாட்ச்.

1 கி	பிரெட்டிலீவர்வாட்ச்சங்கிலியுடன்	3 13 0
2 கி	ஷெ	3 0 0
3 கி	கையில்கட்டக்கூடியசிலண்டர்வாட்ச்	4 6 0
4 கி	ஷெ அசல் சொக்கவெள்ளி	6 0 0
5 கி	வாரந்துக்கொருமுறை சாவிகொடுக்கக்கூடியது நிக்கல்	17 0 0
6 கி	அசல் சொக்கவெள்ளி	22 0 0

☞ எங்களைப்போல் இவ்வளவுசகாயவிலைக்கு ஒருவரும் கொடுக்கமாட்டார்கள். ஒருதடவை தருவித்தால் நன்குவிளங்கும். இதர கம்பெனிகளைப் போல வீண் பிரசுரஞ்செய்ய எங்களுக்கு இஷ்டமில்லை.

உலகப்பிரசித்திபெற்ற கரெட்பிரடியன் வாட்ச் 15 கெம்புகள் செதுக்கியதும் அநேக வருஷம் உழைக்கக்கூடியது. சிறிய கைஸ் அளவுள்ளதும் பின்புறம் இரண்டுமூடிகள்உள்ளது. 25 0

ஷெ அசல் சொக்கவெள்ளி 32 4

Baby அலாரம் டையம்பீஸ் 3 8

தினம் நூற்றுக்கணக்கான கெடியாரங்கள் வி. பி. யில் அனுப்பப்படுகின்றன. ஆர்டர்செய்பவர் பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டெழுதவும்.

மானேஜர்
லண்டன் வாட்ச் கம்பெனி,
திருவாதி தஞ்சாவூர் ஜில்லா.

ரிஜிஸ்டர்செய்த
இலங்கை
கறுப்புக்குளிகை. ☞ ●

இக்குளிகையைப் பாவிப்பதால் வயிற்றிலுள்ள மந்தம் அஜீரணம் முதலிய தீர் அழுக்குகளைநீக்குவதுமன்றி வயிற்றுவலி, வயிறூதல், பசியின்மை, மலச்சிக்கல், கரக்குணம், அண்டவாதம், கைகால்உளைவு, இடுப்புவலி, சரீரஉளைவு, பல்வலி, முரசுகரைதல், காதுரோகம், கக்கசப்பற்று, வாய்நாற்றம், மூகப்பரு, தலைவலி, ஒடுகாய்வு, சிரங்கு, குஷ்டம், தனிசன்னிப்பற்று [illegible] வயிற்று உதரரோகம், பாண்டுரோகம், தூக்கமின்மை, சரீரவீக்கம், காம்பு பெலயின்மை, மூலரோகம், பீனிசரோகம், காட்டுக்காய்ச்சல்முதலிய சரீரத்திலுள்ள அநேக இரத்தஅசுடான ரோகங்களையும்நீக்கி தேகபுஷ்டியைக்கொடுக்கும். சிலர் ஒருமருந்தில் இவ்வளவுகுணம் உண்டாகுமா என்று சிந்திக்கிறார்கள். ஒருமுறைபாவித்தால் அதன் ஆச்சரியமான குணம் விளங்குவதுடன் மனத்திருப்தியுமுண்டாகத் தடையில்லை. [illegible] மாலியமாய் சஞ்சயாத் (அர்த்தம்) வயிற்றில் மலமாகிய தீர் அழுக்கு நிறைந்திருப்பதால் அநேக ரோகங்களுமசரீரத்தில் உண்டாகுமென்றுமேற்குட்டும ஆயுர்வேத சுலோகம் கூறுகிறது.

பாவிக்கும்விதம்—இரவுசாப்பிட்டு அரைமணிக்குப்பின் ஒருகுளிகையைவிழுங்கி ஆதியகடுதண்ணீர்குடித்துப்படுக்கவேண்டும் காலையில்இலகுவாய் இரண்டு அல்லதுமூன்றுதரம் மலம்கழியும் அதிகமாக வயிற்றால் போகவேண்டுமானால் 2 குளிகையைப்பாவிக்கவேண்டும் நிறுத்தவிடவேண்டுமானால் அராருட்மாவுகஞ்சி யாகிலும் காப்பியாகிலும் சாப்பிடவும் பத்தியமில்லை ஆண்களும் பெண்களும் பாவித்துக்குணமடைந்தகுளிகை கர்ப்பஸ்திரீகளும் 8 வயதிற்குறைந்த பிள்ளைகளும் பாவிக்கக்கூடாது, இதைப்போலுள்ள மற்றக்குளிகைகளுக்குஇக்குளிகைஇரண்டாவதல்ல க்குளிகையின் மேன்மையான குணத்தைச் இலங்கைமாநகரத்தில் பிரசுரமாகும் பத்தி களின் பத்திராதிபர்களும் இலங்கைக் கனதன ன்களும் அநேகநற்சாக்ஷிப்பத்திரங்கள் த்திருக்கிறார்கள்.

25 குளிகையடங்கிய பெட்டி1-க்கு ரூபா 1 குளிகையடங்கிய பெட்டி 1-க்கு சதம் 50. 5 கைஅடங்கியதற்கு சதம் 25 தபாற்செலவு 1 ந்தியாவுக்கு தபாற்செலவு அணா5. 50 சதத் கு குறைந்து வி. பி. பார்சல் அனுப்பப்பட டாது.

கொழும்புபுறக்கோட்டை ஆதிருப்பள்ளித்தெ 26-ம் நிம்பர் ஸ்ரீ லங்கா மருந்துசாலையின் தியர் எஸ். எச். பீ. த சில்வா அவர்களிடம் த்துக்கொள்ளலாம்.

இக்குளிகையை கமிஷனுக்கு மொத்தமாக த்தவிற்க வியாபாரிகள்தேவை. சகலஇரகசிய ணவியாதிகளுக்கும் மருந்தெப்போதும் தயாரா ருக்கின்றது. தாங்கள் பார்வையிட்டபின் பின் யவுசெய்து தங்கள் சிநேகிதருக்குக் காண்பி வும்.

SENSATIONAL DISCOYERY
OF AMERICA
ELECTRIC SOLUTION.

Specific for:—
- General Debility.
- Loss of Manhood.
- Nervous Debility.
- Rheumatism.
- Dyspepsia.
- Costiveness.
- Loss of Appetite.
- Piles.
- Paralysis.
- Gonorrhea.
- Diabetes.

It lends, or concentra Electric Current, the wa es or superfluity of which in the human constitution causes all sort of diseases. It acts like a charm where Allopathic, Homoeopathic, Hakimi or Ayurvedic medicines totally failed.

Price— 1 Phial for month's use Rs. 1/—Postage up to 3 phials As. 6.

Foreign Postage up to 3 phials Rs. 1/—

Sole Agent: Dr. D. D. HAZRA
Fatehpur, Garden-Reach P. O.
CALCUTTA

பிரேதப்பெட்டிகள்.

பலதரவில் பலவிலையிலும் பலசமயத்தவர்களுக்குமாய் வெறும்பெட்டியாகவும் [illegible] ஆயித்தமாயிருக்கின்றது.

வ. ம. லோப்பையா,
யாழ்ப்பாணம்

Jaffna Commercial Corporation Ltd
யாழ்ப்பாண வியாபார சமுதாயம்

இச்சமுதாயத்தவரின் யாழ்ப்பாணப் [illegible] சாய்ப்பிலும், சுன்னாகம், சங்கானை, சாவகச்சேரி, பருத்தித்துறை, அநுராதபுரம், மட்டக்களப்பு என்னும் கிளைச்சாய்ப்புகளிலும் யாழ்ப்பாணமாரியாய்ச் சீமையிற் தனி உருக்கிற் செய்யப்பட்ட "பித்தல்" "குலோச்ச" மண்வெட்டிகள், தெருவேலை மண்வெட்டிகள், கோடரிகள், பிக்கான்கள் விற்பனவுக்கிருக்கின்றன.

Wm Mather,
Managng Directo

பி. சுப்பராயின்
அபூர்வ ஆயுர்வேத அவுஷதங்கள்

37 காலரா [illegible] வாந்திபேதிக்கு மருந்து இக்கொடியரோகத்துக்கு இதனைகண்ட ஒளஷத டப்பா ஒன்றுக்கு ரூபா 1. வி பி செலவு 1 மு ல்டப்பாக்கள்வரையிலனுப்ப அணா5பிரத்தியேகம்

38 மலபந்தநிவாரணி—மலசலக்கட்டு அசீரண மாந்தம் வாய்வு குடல்புரட்டல் மூலச்சூடு ந்தல் இளைப்பு மூலம் வெளியாமை புளித்த ப்பம் தீரும், தினம் தப்பாமல் காலாகாலங்களி மலம் தயாராகும் டப்பா ஒன்றுக்கு விலை அணா 10, வி பி செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்

39 விஷஜநிலா—எப்பேர்க்கொத்த நீலவ யும் நெற்றியின் இரண்டு பொட்டுகளிலும் ம்மருந்து கொஞ்சந்தடவி கைகளுக்கு தேய்க்கவே ண்டும் இடுப்புநோய் கருத்துநோய் பக்கரும கைகால்பிடிப்பு முதலியவும் இன்னும்தேகத்தி காணும் பலநூறுமுள்ள சகலவலிகளுக்கும் இம்மரு ந்தில்கொஞ்சம் யெடுத்துநோயுள்ளவிடத்தில் கண் முன் த்தேய்க்கச்சுகமாகும், தேள்கடிவைக்காலிக சான் இதைக்கொட்டினஇடத்தில் கடித்த விடத் தில்இம்மருந்தைத்தடவிநல்லுகத் தேய்த்தால் சவுக்கியமாகும், சீசாஒன்றுக்கு அணாஎட்டு வி பி செலவு ஒன்று முதல் ஆறுசீசாக்கள்வரையில் அ ணாஐந்து பிரத்தியேகம்

40 குமாரநிலா—இதைப்பிரதிதினமும்குடித் தநிடத்தில்பூசிவந்தால் சோர்வுநரம்புகளின்தளர்ச்சிநீங்கிமிகுந்த வலிவுகொள்ளும் இழந்துபோனசத்திமுற்றிலும்பெற்றுசுகிக்கலாம் விலைசீசா ஒன்றுக்குரூபா ஒன்று வி பி செலவுஒன்றுமுதல் ஆறுசீசாக்கள்வரையில் அணாஐந்து பிரத்தியேகம்

அத்தர் உன்னத வாசனைத்திரவியங்கள் முதலானவைகளின் விலைவிபரமாவது.

உயர்ந்தகோரோசனை தோலாஒன்றுக்கு ரூபா எட்டுஉயர்ந்தபச்சைக்கற்பூரம் தோலா ஒன்றுக்கு ரூபா இரண்டு உயர்ந்த குங்குமப்பூ தோலா ஒன்றுக்கு ரூபா2. விபி செலவுபிரத்தியேகம்

உசிதமான அத்தர்கினிசுகள்—ரோசாப்பூ மல்லிகைப்பூஜாதிப்பூ மகிழம்பூ விளாமிச்சம்வேர் மரிக்கொழுந்துதாழம்பூசவாதுமுதலியபுஷ்பங்களின்முதற்றரமான அத்தர்வகை தோலா 1-க்கு ரூபா 1 அணா 8, வி பி செலவு பிரத்தியேகம்

சோடாவாடர்பவடர்—இச்சூரணத்தில் கொஞ்சமெடுத்துக் குளிர்ந்த சலத்துடன் கலந்துகொண்டால் அதிஉசிதமான சுகமான சோடாவாடர்உண்டாகும் ஒருசீசாவிலுள்ள பவுடர் சுமார் 8சீசா சோடாவாடர்செய்யப்போதுமானது விலைசீசாஒன்றுக்குஅணா 6 வி பி செலவுஒன்றுமுதல் 4 சீசாக்கள்வரையில் அணா5பிரத்தியேகம்

லெமனெட் பவடர்—இச்சூரணத்தில் கொஞ்சமெடுத்துக் குளிர்ந்தசலத்துடன் கலந்தால் அதிஉத்தமமான லெமனெட் தயாராகிவிடும் ஒருசீசாவிலுள்ள சூரணம் சுமார் 8 பெரிய சீசா லெமனெட் செய்யப்போதுமானதுவிலை சீசா ஒன்றுக்கு அணா 6 வி பி செலவு ஒன்றுமுதல்4 சீசாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்

பன்னீர்—இப்பன்னீர் அரைஅவுன்ஸ் சீசாவில் விற்கப்படுகிறது, இச்சிறுசீசாவிலுள்ள பன்னீரை 3 பெரியசீசா வெந்நீருடன்கலந்தால் முதல்தரமான 3சீசா பன்னீராகும் மேன்மையான பன்னீர்விலை சீசா 1-க்கு அணா 8 வி பி செலவு 1 முதல் 3 சீசாக்கள்வரையிலனுப்ப 5 அணா பிரத்தியேகம்

அரகசா—இது மற்றொருவித திவ்யமான சுகந்தகலவை இதைத்தண்ணீயாகவாவதுசந்தனத்துடனாவது உபயோகிக்கலாம் தேகத்தில் பூசிக்கொள்ளலாம் உடுப்புகளுக்குப்போடலாம் அதிஉன்னதமான வாசனை இதின் திவ்யமானபரிமளத்தைச் சுகித்தவர்களால் மிகவும்புகழப்படுகிறது ஒருதடவைபூசினபிறகு பிரதிதினம் ஸ்நானஞ்செய்தாலும் மூன்றுநாள்பரியந்தம் இதன்இன்பமானபரிமளம் தேகத்திற்றங்கிநிற்கும் விலைடப்பாஒன்றுக்கு அணா 6, 1முதல் 12 டப்பாக்கள்வரையிலனுப்ப வி பி முதலியசெலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

அபீர்—இச்சுகந்தத்தில் கொஞ்சமெடுத்து உடுப்புகளுக்குப்போடலாம் தேகத்திற்பூசலாம் முகத்திற்றடவிவந்தால் பருக்கள்கறுப்புப்புள்ளிகள் மேகப்படர் மாசு அரிப்பு முதலியனநீங்கி முகத்திற்கு வசீகரத்தைத்தரும் வெற்றிலையில் தடவித்தாம்பூலத்துடனுபயோகித்தால் மிக்கமனோகரத்தைத்தரும் கொஞ்சமெடுத்து வெந்நீருடன்கலந்துஸ்நானஞ்செய்தால்தேகமெல்லாம் சுகந்தபன்னீர்வாசனையுள்ளதாகும் மனக்களிப்பையுண்டாக்கிதேகசிரமத்தையாற்றும் விலை டப்பாஒன்றுக்குஅணா 8. 1முதல் 12 டப்பாக்கள்வரையிலனுப்ப விபிமுதலியசெலவுகள் அணா 5 பிரத்தியேகம்

இந்தியன்பெட்டல்ஸ்டட—அதிமனோரம்மியமானசுகந்தகலவைபொட்டலம் உடுப்பு பெட்டிகளில்வைத்திருந்தால்உடைகளுக்கு மிகவும் உன்னதமானசுவாசனையேற்றுவது மன்னியில் வண்டுமுதலிய பூச்சிகள் அணுகாமற்காக்கும்இதன் இன்பமானசுகந்தம் நெடுநாள்நிற்கும் பொட்டலம் ஒன்றுக்கு விலை அணா4, 1 முதல் 12 பொட்டலங்கள்வரையிலனுப்ப விபி செலவு அணா 5 பிரத்தியேகம்

43 நரைமயிர்க்குக்கஷாயம்—இதன் சீசாவுடன் சுற்றிவரும் உடாக்ஷனில்கண்டபடி உபயோகித்தால்நரைத்தமயிரும் செம்பட்டைமயிரும் நரைப்பதற்குமுன்னிருந்த கறுப்புநிறத்தையும் பளபளப்பையுமடையும் இதை உபயோகித்தால் முகலட்சணமும்கூட முன்பாவதனைக்கிழவர்களைவாலிபர்களைப்போல் தோற்றச்செய்யும் விலைசீசாஒன்றுக்கு ரூபா1. 1முதல்6சீசாக்கள்வரையிலனுப்ப விபி செலவு அணா 5 பிரத்தியேகம்

44 வஷ்டிமீவிலாச தைலம்—மிகவும் வாசனையுள்ள தைலம். தலைமயிர் கண் புருவம், மீசை, தாடி மெத்த செழிப்பாகவும், கருப்பாகவும், நெருக்கமாகவும் வளர்ச்சியும். இதன் இன்பமான சுகந்தம் இத்தைலத்தை உபயோகிக்கிறவர்களை சுற்றிக்கொண்டே நெடுநேரம் வீசும், மூளைக்கொதிப்பை போக்கி, சித்தபிரமை தலைமயக்கம், புத்திமந்தம், நித்திரையில்லாமை முதலியவைகளை போக்கும். விலை சீசா 1—க்கு அணா 12 —ஒன்று அல்லது 2 சீசாக்கள் வரையில் அனுப்ப வி- பி- செலவுகள் அணா 5 பிரத்தியேகம்

நாக்குப்பூச்சிமருந்து—குடலிலுள்ளஎல்லாவித கிருமிகளையும்வெளியாக்கி நாக்குப்பூச்சிகளாலுண்டாகும் எல்லாவிதபாதைகளையும்நிவாரணஞ்செய்யும் தேகஆரோக்கியத்தைத்தரும்நாக்குப்பூச்சிகள் குடலிலிருந்தால் அடிவயிற்றில்களைப்பு பசியின்மைஅபரிதமான பசியைப்போல்தோற்றல்சாப்பிட்டபின் வயிற்றுவேவு வயிற்றுப்போக்கு வாய்நாற்றம் வாந்தி வெகுட்டல் காய்ந்தவலி மூக்கிலும் ஆசனத்திலும்அரிப்பு வாயில் உமிழ்நீர் ஊறல் நாக்குஇழுத்துக்கொள்ளல் சிலசமயம் மலச்சிக்கல்சிலசமயம் மலக்கழிச்சல் முதலிய பற்பல நோய்கள்நாக்குப் பூச்சிகளால் உண்டாவதை இம்மருந்துமுற்றிலும் குணமாக்கும். விலை சீசாஒன்றுக்கு அணா பத்து, ஒன்றுமுதல் பன்னிரண்டு சீசாவரையிலனுப்ப வி பி செலவு அணா ஐந்து பிரத்தியேகம்.

தாம்பூலவிலாசம்—தாம்பூலம் தரிப்பவர்களுக்கு அதிஅவசியமானமனக்களிப்புண்டாக்கக்கூடிய வாசனைக்கலவை விலை டப்பா ஒன்றுக்கு அணா நாலு வி பி செலவு ஒன்றுமுதல் பன்னிரண்டு டப்பாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்.

ஓமம்வாட்டர்—இது சாதாரணமாய்க் கடைகளில் பெரிய சீசாக்களில் விற்கும் ஓமம்வாட்டரல்ல. எம்மால் தயாரிக்கும் ஷெ ஓமம்வாட்டர் அரைஅவுன்சு சீசாக்களில்விற்கப்படுகிறது. இதைத் துளிகள் கணக்காவே உபயோகித்தால் போதுமானது; இச்சிறுசீசாவிலுள்ளதை இருபத்துநாலு அவுன்சு சுத்தசலத்துடன் கலந்துகொண்டால் கடைகளில்விற்கும் ஓமம்வாட்டரைவிடச் சிறந்த ஓமம்வாட்டரைத்தரும். வயிற்றுப்பொருமல் வயிற்றுவலி அக்கினிமாந்தம் அசீரணபேதி இவைகளுக்குக்கொடுத்தால் சவுக்கியமாகும் சீரணசக்தியை அதிகரிக்கும் கலரா என்னும்வாந்திபேதி ரோகத்திற்கு இதைக்கொடுத்துத் தருந்தகுணத்தைக் கண்டதுண்டு, விலைசீசாஒன்றுக்கு அணா எட்டு, வி பி செலவு ஒன்றுமுதல் ஆறு சீசாக்கள்வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்

உடுப்புகளுக்கு விலாசம்போடும் அழியாத மசி—அல்லது இங்கி—பருத்தி கம்பளி பட்டு முதலியவஸ்திரங்களில் எவ்வளவு தடவை வஸ்திரங்களைத் தவைத்தாலும் அல்லது வெளுத்தாலும் விலாசம் எக்காலத்திலும் அழியாது "இம்மையினால்" விலாசம்போட்டால் உடுப்புத் திருட்டுப்போகாமலும் மாற்றப்படாமலும் காக்கலாம், விலை சீசா ஒன்றுக்கு அணா எட்டு, வி பி செலவு ஒன்றுமுதல் ஆறு சீசாக்கள்வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்

கஸ்தூரிகலந்த லாவண்டர் வாட்டர்— எங்களுடைய அவுஷதசாலையில் தயாராக்கப்பட்ட மிகவும் சுகந்தத்திரவியம் சீமையிலிருந்து வரவழைத்து விற்கிற வஸ்துவல்ல எப்பேர்ப்பட்டவர்களையும் மயக்கக்கூடிய சுவாசனை வஸ்திரங்களை உபயோகித்தால் இன்பமான சுகத்தைத் தரும் இந்தச்சுகந்தத்தை நாலு துளிகள் உபயோகித்தால் கடைகளில் சாதாரணமாக விற்கும் லாவண்டர் வாட்டரை இருபது துளிகள் உபயோகித்தால் எம்மாதிரியான சுகந்தமிருக்குமோ அதைவிட ஜாஸ்தியாக எம்முடைய லாவண்டர் வாட்டர் மனோரம்மியமான சுவாசனையை வீசும், உபயோகித்தவர்களைச் சுற்றி வெகுநேரம் பரிசுத்தமான பரிமளத்தைப் பரவச்செய்யும் அரைஅவுன்சு சீசாக்களில் விற்கப்படுகிறது, விலை சீசா ஒன்றுக்கு அணா எட்டு, வி பி செலவு ஒன்றுமுதல் ஆறுசீசாக்கள்வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்,

சேசர்பவடர்—இது ஓர்விதமான விலைபெற்ற சுகந்தகலவை,இதிற்கொஞ்சமெடுத்துத் தண்ணீரிற்கலந்தாவது அல்லது கொஞ்சம் சந்தனத்திற்கலந்தாவது தேகத்திற்பூசினால் எல்லாரும் புகழத்தக்கபரிமளத்தைத்தரும் கலியாணம் முதலிய சுபகாரியங்களுக்கு இதை அவசியமாகஉபயோகிக்கவேண்டியது இதன் இன்பமானசுகம் உபயோகித்தவர்களுக்குத்தான் தெரியும் ஆனந்தத்துடன் மனோரம்மியமான இச் சிரேஷ்டமானகலவையைச்சேர்த்துக்கொண்டால் சந்தனத்தில் அத்தர் பன்னீர் குங்குமப்பூமுதலியவைகளைச் சேர்க்கவேண்டியதனவசியம், சீசா 1க்குவிலை அணா 8.1முதல் 6 சீசாக்கள்வரையிலனுப்ப வி பி செலவு அணா 5 பிரத்தியேகம்

ஓடிகோலோன்—இது சீமையிலிருந்துவரவழைத்ததல்ல எங்களுடைய அவுஷதசாலையில் எங்களால் சுயமாகத்தயாரிக்கப்பட்டது. மனக்களிப்பையுண்டாக்கக்கூடிய சுவாசனை உடம்பில பூசலாம் வஸ்திரங்களுக்குப் போடலாம் இதை உபயோகித்தால் தலைவலி குணமாகும் தேகசிரமத்தையாற்றும். வெகுநேரம் வாசனை தங்கிஉபயோகித்தவர்களைச்சுற்றிசுவாசனைபரவியிருக்கும் சாதாரணமாய்த் தண்ணீர்கலந்துகடைகளில்விற்கும் சரக்கைப்போலில்லாமல் இது ஒருசுயமான வாசனைக்கலவை, கடைகளில்விற்கும்ஓடிகோலோன் பத்துத்துளி உபயோகிக்குமிடத்தில் எம்மால் செய்து விற்றுவரும் ஷெ ஓடிகோலோனை இரண்டுதுளிகள் உபயோகித்தால்போதுமானது. அரைஅவுன்சு சீசாக்களில்விற்கப்படுகிறது விலை சீசாஒன்றுக்குஅணா 8 வி பி செலவு ஒன்றுமுதல் ஆறுசீசாக்கள் வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

குறிப்பு—இந்தஇடங்களில் மலையாளம் தெலுங்குகன்னடம் முதலிய பாஷைகள் தெரியாதபடியால் ஆர்டர் செய்கிறவர்கள் தயவுசெய்து தமிழிலாவது இங்கிலிஷிலாவது அடியில்குறித்தவிலாசத்துக்கு விபரமாக எழுதிப்பெற்றுக்கொள்ளக் கோருகிறேன்.

பரிசுத்தமான தேன்.

காடுகளிலிருந்து ஸ்பெஷலாய் எங்களால்நியமிக்கப்பட்ட வேலைக்காரர்களால் சேகரிக்கப்பட்டது. கடைகளில்விற்கும் வெல்லப்பாகைகலந்த தண்ணீர்போன்றதேனல்ல. இத்தேன் மிகவும்தடிப்பாகவும், திக்காகவும், சுத்தமாகவுமிருக்கும். கலப்பில்லாத அப்பட்டமான சரக்கு. மேலும் வைத்தியசாஸ்திர முறைப்படிக்கு எங்களால்சுத்திசெய்யப்பட்டு விற்கப்படுகிறது. கடைகளில்விற்கும் தேன் ஒருசேர்சேர்க்குமிடத்தில் எம்மால் விற்கப்படும் தேன் 4 துளிகள் உபயோகித்தால் போதுமானது இப்படிப்பட்ட மேலானவும், சுத்தமானவும், சுயமானவும், சரக்கு கிடைப்பதரிது. மருந்துகளை இத்தேனுடன் அனுபானித்து உட்கொண்டால் மருந்துகளின்வீரியமும், குணமும் அதிகரிக்கச்செய்யும்.

விலை டின் 1-க்கு அணா 12 ஒன்று அல்லது இரண்டு டின்கள்வரையிலனுப்ப வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

எனது விலாசம்
பி. சுப்பராய்
ஆயுர்வேதஔஷதசாலை
ஸ்ரீ வெங்கடேசபெருமாள்கோவில் சன்னதி
தஞ்சாவூர்

☞ MV ADDRES
P. SUBBRAOY
Ayurvedic Pharmy
Sri Venkedasa
Perumal Koil
Sannathy
Tanjore

Printed and published by
S.Tambimuttupillai at his Atchuvaly
Gnanapragasa Yanthira office,
Atchuvaly, Jaffna